

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 119 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 23 – சனிக்கிழமை 09 டிசம்பர் 2023 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 119 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 23 - Saturday 09 December 2023 - Dak 12 Pages ₹ 5.00


# வரலாறு படைப்போம்; வாரீர் நெல்லைக்கு!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

இளைஞர் எழுச்சி குறித்தும் – இளைஞர்கள் புரிந்துள்ள இமாலய சாதனைகள் பற்றியும் – இன்றுடன் நான் எழுதிய பதினைந்து கடிதங்களை, வரலாற்றுக் கருவூலமெனப் போற்றிப் பாராட்டி, புகழ்ந்துரைத்து, உன் போன்றோர் பொழிந்துள்ள வாழ்த்துகளை முத்தமிட்டுப் பையில் திணித்துக் கொள்வதில் பெருமையுறுகிறேன். அதற்குள் சில ஆத்திரக்காரர்களுக்கு, அவசரக்காரர்களுக்கு ஏற்கெனவே அவர்தம் நெஞ்சில் நிரம்பியுள்ள அசூயை, கொதிப்பேறிப் பொங்கி வழிந்து, அத்துடன் நஞ்சும் கலந்து, ஏதேதோ "திருவாய்ச் சிந்து" பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

★ அவர்கள் என்ன! நேற்றைய நாளில் அரசு தலைமைச் செயலகத்தில், பதினெட்டுப் பச்சிளம் குழந்தைகளின் இருதய சிகிச்சைக்காக அரசு சார்பில் சிகிச்சை கட்டணத்தில் பெரும்பகுதியை, அதாவது 90 சதவிகித அளவிற்கு அரசே செலுத்துவதற்கு ஒப்புதல் அளித்து, நல் மனம் படைத்த மருத்துவமனை உரிமையாளர்கள் ஒவ்வொருவருடனும் ஒப்பந்தம் செய்து, அந்தக் குழந்தைகளுக்கு அதற்கான பதிவு அட்டைகள் வழங்கினேனே! அதைப் பற்றி நினைத்தார்களா?

★ நேற்றையதினமே, 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழக அரசின் டிட்கோ நிறுவனமும், பிரபல மருத்துவ நிபுணர் டாக்டர் கே.எம். செரியன் அவர்களின் பிரான்டியர் லைப்லைன் நிறுவனமும் இணைந்து, மருத்துவ கிராமம் ஒன்றினைத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதே! அதைப்பற்றி இந்த அசூயையாளர்கள் அறிவார்களா?

★ அதுமாத்திரமல்ல, தமிழக அரசின் சார்பில் இந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய்க்கான தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, அந்தத் திட்டங்கள் எல்லாம் நடைமுறையில் இருந்து வருகின்ற நேரத்தில், நேற்றைய தினம் தலைமைச் செயலகத்தில், மிகப்பெரிய தொழில் நிறுவனமான "போர்டு" தொழிற்சாலையின் ஆசியா பசிபிக் மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளுக்கான செயல் துணைத் தலைவர் ஜான் பார்க்கர் அவர்கள் என்னைச் சந்தித்தபோது, மேலும் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழகத்திலே திட்டம் தொடங்கிட விருப்பதாகவும் அறிவித்துச் சென்றிருக்கிறார். அன்றாடம் அறிக்கை விட்டுக்கொண்டிருப்போர் அறியமாட்டார்களா இதனை?

★ தேர்தல் வாக்குறுதியாக அறிவித்து, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்க முடிவு செய்து அதற்காக வெளிப்படையான ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் கோரி, சட்டமன்றக் கட்சித் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு எனது தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டு, 25 லட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, 18-11-2007 வரை 23லட்சத்து, 79 ஆயிரத்து, 721 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டு, அவற்றில் 21 லட்சத்து 32 ஆயிரத்து 956 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளனவே! மேலும் 750 கோடி ரூபாய்ச் செலவில், 34 லட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்து வழங்குவதற்காக முடிவு செய்யப்பட்டு, வருகிற 27ஆம் தேதி முதல் அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர்கள் பங்கேற்று அவைகளை வழங்கப் போவதாக அறிவித்துள்ளோமே, அதைப்பற்றி பாராட்டுரை பகரப் போகிறார்களா?

## கலைஞர் கடிதம்

★ இதுபோலவே, ஏழை எளிய தாய்மார்களுக்கு இலவசமாக எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகள் வழங்கிடுவோம் என்று அறிவித்து,

16-11-2007 வரை 3 லட்சத்து ஓர் ஆயிரத்து 560 எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகள் வழங்கப்பட்டு, தொடர்ந்து 27-11-2007 முதல் மேலும் எட்டு இலட்சம் எரிவாயு அடுப்புகள் வழங்கப்படவுள்ளனவே! இதனைப் பற்றி எரிச்சல்காரர்கள் புகழப் போகிறார்களா?

★ 1 இலட்சத்து 16 ஆயிரத்து 508 நிலமற்ற ஏழை விவசாயி - விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 1 லட்சத்து 33 ஆயிரத்து 688 ஏக்கர் நிலம் இலவசமாக அரசின் சார்பில் அளிக்கப்பட்டுள்ளதே, இதுகுறித்து பாராட்டு வழங்கப் போகிறார்களா?

★ 2 வயது முதல் 15 வயது வரை உள்ள 71 லட்சம் குழந்தைகள், மாணவர்களுக்குச் சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டைகள் வழங்கப்படுகிறதே, அதைப் பற்றி கருத்து தெரிவிக்கப் போகிறார்களா?

★ 1 கோடியே 78 லட்சத்து 240 குடும்பங்களுக்கு கிலோ அரிசி 2 ரூபாய் வீதம், மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறதே, எரிச்சல்காரர்கள் அதுபற்றி என்ன சொல்லப் போகிறார்கள்?

★ 22 லட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு, சுமார் 7000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறோமே, இன்றைக்கு ஆர்ப்பாட்டம் செய்வோர் அதற்காக வரவேற்பு தெரிவித்ததுண்டா?

★ 10-11-2007 வரை 2 லட்சத்து 7 ஆயிரத்து 287 வீட்டு மனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டிருப்பதோடு, கடந்த 14-ந்தேதியன்று அதுபற்றி ஆய்வு நடைபெற்று, இலவச வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கிட எந்தவிதமான வருமான உச்ச வரம்பும் கிடையாதென்று அறிவித்திருக்கிறோமே! எது எதற்கோ வக்கணை பேசுவோர், அதைப் பற்றி பாராட்டு கூறியிருக்க வேண்டாமா?

★ 1இலட்சத்து 60 ஆயிரத்து 531 விவசாயக் குடும்பங்களுக்கு விவசாயி - விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நல உதவித் திட்டத்தின் கீழ், 69 கோடியே 29 லட்சத்து 11 ஆயிரத்து 719 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதே, அதைப்பற்றி ஒரு வார்த்தை உண்டா?

★ கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் 73 ஆயிரத்து 665 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்காக 110 கோடியே 49 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயும், ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்காக - 4 லட்சத்து 72 ஆயிரத்து 20 கர்ப்பிணி பெண்களுக்காக 206 கோடியே 14 லட்சத்து 33 ஆயிரம் ரூபாயும் நிதி உதவியாக வழங்கப் பட்டுள்ளதே, கேலி பேசுவோர் இதைப் பற்றியெல்லாம் கனவிலாவது நினைத்தது உண்டா?

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## 'மிக்ஜாம்' புயல் பேரிடர்: முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு என்னுடைய ஒரு மாத ஊதியத்தை வழங்குகிறேன்!

# அனைத்து சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களும் - ஒரு மாத ஊதியத்தை வழங்கிடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, டிச. 9-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த அறிக்கையில், "மிக்ஜாம் புயல் பேரிடர் பாதிப்பிலிருந்து மீள முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு என்னுடைய ஒரு மாத ஊதியத்தை வழங்குகின்றேன்.**

**அனைத்து சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது ஒரு மாத ஊதியத்தை அளித்திடுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:-

மிக்ஜாம் புயலால் கடந்த டிசம்பர் 2 முதல் 4ஆம் தேதி வரை சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் கொட்டித் தீர்த்த மழை என்பது, 47 ஆண்டுகால வரலாற்றில் இல்லாத அளவிலான பெருமழை. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ 1 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பேரிடர் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள பேரிடர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்குமே ஏற்பட்டுள்ள பேரிடர்.

மழைநீர் வடிகால் பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுத்தி இருந்ததால்தான் பேரழிவு தவிர்க்கப்பட்டது. அதேபோல் அனைத்துத் துறைகளும் பேரிடரை எதிர்கொள்ளத் தயார் நிலையில் இருந்ததும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வைத்திருந்ததும் இணைந்து மக்களைக் காத்துள்ளது. இருப்பினும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவீச்சில் நடைபெற்ற மீட்புப் பணிகளின் காரணமாக மூன்று நாட்களுக்குள் பெரும்பாலான இடங்கள் மீட்கப்பட்டு



இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி உள்ளது. குறிப்பிட்ட சில பகுதிகளில் மீட்புப் பணி நடந்து வருகிறது. இத்தகைய அசாதாரண நேரத்தில் அனைத்துத் தரப்பும் மக்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பேரிடர் பாதிப்பிலிருந்து மக்கள் மீள்வதற்கு உதவியாக நல்லுள்ளங்கள் பலர் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தங்களுடைய பங்களிப்பை வழங்குகின்றனர். அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த இயற்கைப் பேரிடரிலிருந்து மீள்வதற்கான கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டியது அவசியமாகிறது.

எனவே, அரசின் முனைப்பான முயற்சிகளுக்கு நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தங்களால் இயன்ற வகையில் உதவி செய்ய வேண்டியது அவசியம். இச்சூழலில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதி வழங்கிட வேண்டுமென்று உங்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன். அதன் தொடக்கமாக என்னுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்குகிறேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களும் தங்களுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 09-12-2023

# 2015 ஆம் ஆண்டும் 2023 ஆம் ஆண்டும்

**2015** ஆம் ஆண்டு என்ன நடந்தது என்பதையே அறியாமல் - 2023 ஆம் ஆண்டையும் அதனையும் ஒப்பிட்டு சிலர் உளறி வருகிறார்கள்.

★ 2015 பெருவெள்ளத்தின்போது பெய்த மழையளவு 33 செ.மீ - 2023 ஆம் ஆண்டு இரண்டு நாட்களில் மட்டும் 47 செ.மீ. மழை கொட்டித் தீர்த்திருக்கிறது. இதனை அவர்கள் முதலில் உணர வேண்டும்.

2015இல் மக்களுக்கு முன்னறிவிப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை. மக்கள் உறங்கிக் கொண்டிருந்த இரவு நேரத்தில் செம்பரம்பாக்கம் ஏரி திறந்து விடப்பட்டது. மழை நீர்க் கால்வாய்கள் சரி செய்யப்படாத காரணத்தினால் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தது. பத்து நாட்கள் வரை நீர் வடியவில்லை. தொலைத் தொடர்பு முழுமையாகத் துண்டாகியது. சென்னை முழுவதுமாக ஸ்தம்பித்தது. பால் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு கடுமையாக நிலவியது. பல இடங்களில் பத்து நாட்களுக்குப் பிறகே மின் இணைப்பு வழங்கப்பட்டது. 289 பேர் உயிரிழந்தனர். 23.25 லட்சம் வீடுகள் மூழ்கின. அமைச்சர்களோ முதலமைச்சர் ஜெயலலிதாவோ களத்திற்கு வரவில்லை.

2015-ஆம் ஆண்டு சென்னையில் பெரு வெள்ளம் ஏற்பட்ட போது சென்னையின் மேயராக இருந்தவர் அ.தி.மு.க.வைச் சேர்ந்த சைதை துரைசாமி. அப்போது அவர் செயல்படாமல் முடங்கிக் கிடந்தார். வெள்ளச் சேதத்தைப் பார்வையிடச் சென்ற மேயர் சைதை துரைசாமியை ‘டைம்ஸ் நவ்’ டிவி நிருபர் பேட்டியெடுக்க முற்பட்ட போது சைதை துரைசாமி பயந்து ஓட்டம் பிடித்தார்.

“சார்.. மழை வெள்ளச் சேதத்தில் சென்னை மாநகராட்சி தோல்வியடைந்துவிட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளதே, அதுபற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்கள்” என அந்த நிருபர் தொடர்ந்து கேள்வி எழுப்பிய போது மேயர் சைதை துரைசாமியோ கேமராவைவிட்டு திரும்பி நின்று கொண்டார், “ப்ளீஸ்… என் ‘நிலைமையை’ புரிந்து கொள்ளுங்கள்” என்று நிருபரைப் பார்த்துக் கெஞ்சி விட்டு கடைசி ஓட்டம் பிடித்தார். இப்போதைய சென்னை வெள்ளத்தைப் பாருங்கள். இப்போதைய மேயர் ப்ரியா, முழுக்க முழுக்க களத்தில் நிற்கிறார்.

**2015 சென்னை வெள்ளத்தில் தன்னார்வலர்கள் அளித்த நிவாரணப் பொருட்களில் எல்லாம் ஜெயலலிதாவின் படம் போட்ட ‘ஸ்டிக்கர்’களை ஒட்டி அரசே வழங்கியது போல தோற்றத்தை ஏற்படுத்தினார்கள் அ.தி.மு.க.வினர். அந்த ஏமாற்றுக்காரர்கள்தான் இப்போதை மழை வெள்ளத்திலும் பொய்களை விதைக்கிறார்கள்.**

2015ல் மீனம்பாக்கம் விமான நிலையம் ஒரு வாரத்திற்கு மூடப்பட்டிருந்தது. சென்னை நகரம் ஒட்டுமொத்தமாக இரண்டு வாரங்கள் முடக்கப்பட்டது. தரைவழியாகச் சேதங்களைப் பார்வையிட முதலமைச்சர் ஜெயலலிதா வரவில்லை. பிரதமர் மோடி வந்தபோது ஹெலிகாப்டரில் தான் அவற்றை முதலமைச்சர் ஜெயலலிதா பார்த்தார். ஜெயலலிதாவின் தொகுதிதான் சென்னையிலேயே அதிகம் பாதிப்புக்குள்ளான இடம். அங்குள்ள மக்கள் அரசு நிவாரண உதவிகளை நான்கு நாட்களுக்குப் பிறகுதான் வாங்கினார்கள்.

2015 பெரு வெள்ளத்திற்குப் பிறகு ஐந்தரை ஆண்டுகளை ஆண்டது அ.தி.மு.க. அரசுதான். அந்தப் படிப்பினையை வைத்து எதையும் செய்யவில்லை.

**ஆனால் 2023 ஆம் ஆண்டான இப்போது அனைத்துக்கும் தயார் நிலையில் இருந்தது தமிழ்நாடு அரசு. ஐந்து நாட்களுக்கு முன்பு இருந்தே முன்னேற்பாடுகளை முடுக்கிவிட்டுக் கொண்டு இருந்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். மழை நீர் வடிகால் பணிகள் திட்டமிடப்பட்டு அதில் 60 முதல் 80 விழுக்காடு பணிகள் முடிவடைந்து இருந்தன. இரண்டரை ஆண்டுகளில் 3,031 கிலோ மீட்டருக்கு மழை நீர் வடிகால்கள், 33 மைக்ரோ ஏரிகள், 16 இதர ஏரிகள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய மின்கம்பங்கள், ட்ரான்ஸ்பார்மர்கள், பில்லர் பாக்ஸ்கள் அமைக்கப்பட்டு தயார் நிலையில் மின்சார வாரியம் இருந்தது.**

**சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு ‘அலெர்ட்’ தரப்பட்டது. மழை பாதிப்பு மாவட்டங்களுக்கு மழைக்கால பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு களத்திற்கு அனுப்பப்பட்டனர்.**

வரலாறு காணாத பெருமழை பெய்த போதும் சூழல் முழுமையாகக் கட்டுப்பாட்டில் இருந்தது. புயலால் கடல் கொந்தளிப்பு அதிகம் இருந்ததால் மழைநீர் கடலுக்குள் சென்று கலக்க முடியாத சூழலில் தேங்கியது. மழை நின்ற ஒன்றிரண்டு மணி நேரத்தில் பல இடங்களில் நீர் வடியத் தொடங்கியுள்ளது. மழையில் சாய்ந்த மரங்கள் ஒரு நாள் இரவிலேயே முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. படிப்படியாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. இரண்டாவது நாளில் முழுமையாக அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சாரம் தரப்பட்டு விட்டது.

**மொத்த அமைச்சரவையும் களத்தில் நிற்கிறது. அனைத்து அரசுத் துறைகளும் களத்துக்கு வந்துவிட்டன. 5000 தூய்மைப் பணியாளர்கள் வெளியூர்களில் இருந்து சென்னை வந்திருக்கிறார்கள். பல இடங்களில் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுவிட்டனர். பால் வழங்கல் ஒரே நாளில் சரி செய்யப்பட்டது. வெளிமாநகரங்களில் இருந்தும் பால் பாக்கெட்டுகள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டன.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தினமும் - பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்து வருகிறார். உதவிகளைச் செய்து வருகிறார். அமைச்சர்கள், மக்களோடு மக்களாக இருக்கிறார்கள். நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், தி.மு.க. நிர்வாகிகளும் களத்தில் நிற்கிறார்கள். இவை எதையும் 2015 பார்த்திருக்க முடியாது. அ.தி.மு.க. ஆட்சிக்கும் தி.மு.க. ஆட்சிக்குமான வித்தியாசம் இதுதான்.**

முதலமைச்சரின் கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டதாக ஆட்சியும் கட்சியும் இருப்பதால்தான் இரண்டு தரப்பும் குதிரை வேகத்தில் செயல்பட்டு, இயற்கைப் பேரிடரை வென்று காட்டி வருகிறது.

## ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை! ரிசர்வ் வங்கி அறிவிப்பு!

மும்பை, டிச. 9 -

வங்கிகளுக்கான குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதத்தை தொடர்ந்து 5வது முறையாக ரிசர்வ் வங்கி மாற்றவில்லை.

நாட்டில் உள்ள வணிக வங்கிகளுக்கு குறுகிய காலமாக அளிக்கும் கடனுக்கு ரிசர்வ் வங்கி வசூலிக்கும் வட்டியே ரெப்போ வட்டி ஆகும். இந்த ரெப்போ வட்டி விகிதத்தை கடந்த 4 முறையும் ரிசர்வ் வங்கி மாற்றவில்லை. இந்நிலையில் மும்பையில் ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை கமிட்டி கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்தி காந்த தாஸ், <Gfx card in> ரெப்போ வட்டி விகிதம் தற்போதைய 6 புள்ளி 5 சதவீதமாகவே நீடிக்கும் என்றும், இதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். நாட்டில் பணவீக்கம் குறைந்து வருவதாகவும், அதனாலேயே ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் செய்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சக்திகாந்த தாஸ் குறிப்பிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.12.2023) தலைமைச் செயலகத்தில், டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய் வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, டி.வி.எஸ். குழும இயக்குநர் சேகர் ஆகியோர் உள்ளனர்.



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டி.பி. சத்திரம் பகுதியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிவாரணப் பொருட்களை வழங்கினார். அருகில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, நிர்வாகிகள் கார்த்திக் மோகன், சா.பரமசிவம் மற்றும் பலர் உள்ளனர்.

### இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# 21 மீனவர்களையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, டிச. 9 –

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 21 மீனவர்கள் மற்றும் 133 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடு வித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:–

தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் (06.12.2023) சிறைப்பிடிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், இலங்கைக் கடற்படை யினரால் பறிமுதல் செய்யப்பட்டு அவர்கள் வசமுள்ள 133 மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (7–12–2023) கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள அக்கடிதத்தில், IND–TN–10–MM–1061IND–TN–08–MM–231,IND–TN–08–MM–385 மற்றும் IND–TN–06–MM–707 ஆகிய பதிவு எண் கொண்ட மீன்பிடிப் படகுகளில் இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 21 மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கைக் கடற்படையினரால் 6–12–2023 அன்று கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கவலைபடத் தெரிவித்துள்ளார்.

மீன்பிடித் தொழிலையே தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி இதுபோன்று கைது செய்யப்படுவது அவர்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப்புப் படகுகளையும் விடு விப்பதோடு, இலங்கைக் கடற்படையினரால் ஏற்கனவே பறி முதல் செய்யப்பட்டு அவர்களது வசமுள்ள 133 மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வேலூர் விமான நிலைய

# விரிவாக்கப் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்!

## மக்களவையில் கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.9-

வேலூர் விமான நிலைய விரிவாக்கப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மக்களவையில் விதி எண் 377 கீழ் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் வலியுறுத்தினார்.

வேலூர் விமான நிலையத்தில் DGCA இன் ஆய்வுப் பணிகளை விரைவு படுத்தவும், விரைவில் அதைச் செயல்பாட்டுக்கு கொண்டு வரவும் அரசை அவர் வலியுறுத்தினார்.

இதுகுறித்து பேசியதாவது :-

வேலூர் நாடாளுமன்ற மக்களவைத் தொகுதி மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வேலூர் விமான நிலையத் திட்டம் பல



கோடி ரூபாய் செலவழித்தும் இன்னும் நிலுவையில் உள்ளது. அது எப்போது நிறைவேறும்? என்பது தமிழக மக்களின் குறிப்பாக எனது வேலூர் மக்களவைத் தொகுதி மக்களின் மனதில் நீடித்து வரும் ஒரு நியாயமான கேள்வியாக உள்ளது.

2017 இல், UDAN பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள சிறிய விமான நிலையத்தை விமான நிலையமாக விரிவு படுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் வேலூர் விமான நிலைய விரிவாக்கத்திற்கு, 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் முழுவீச்சில் துவங்கியது. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட 700 மீட்டர் நீள ஓடுபாதை 850 மீட்டர் ஓடுபாதையாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

வேலூர் தொகுதியில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் பல வருடக் கனவான வேலூர் விமான நிலையம் பயன்பாட்டுக்கு வருதல் எப்போது நிறைவேறும் என்று காத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு சில இந்திய விமான நிலைய அத்தாரிட்டி அதிகாரிகளின் அலட்சிய அணுகுமுறை மற்றும் டி.ஜி.சி.ஏ. அதிகாரிகளின் நிலுவையில் உள்ள ஆய்வு பணிகள் காரணமாக வேலூர் விமான நிலைய விரிவாக்கப் பணி நிலுவையில் உள்ளதால் விமான நிலையம் இன்னும் செயல்பட இயலவில்லை.

உடான் திட்டத்தின் கீழ் விமான நிலைய இணைப்புக்கு வேலூர் நகரம் தகுதியானதாக இருப்பதற்கு சமூக பொருளாதார ரீதியாக வேலூர் மாநகர் கண்டு வரும் வளர்ச்சி உள்ளது. எனவே வேலூர் விமான நிலையத்தை விரைந்து முடிக்குமாறு அமைச்சருக்கு நான் ஏற்கனவே இப்பிரச்சினையை நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பியிருந்தேன். இது குறித்து விமானப் போக்குவரத்து அமைச்சருக்கு கடிதமும் எழுதியிருந்தேன்.

பிரதமர், நிதியமைச்சர், சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, விரிவாக்கப்பட்ட வேலூர் விமான நிலையத்தை விரைந்து அமைப்பதற்கு டி.ஜி.சி.ஏ.வின் ஆய்வை விரைவுபடுத்துமாறு அமைச்சரிடம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

# வரலாறு படைப்போம்; வாரீர் நெல்லைக்கு!


## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

மக்களின் தேவைகளுக்காக நிறைவேற்றப்படும் திட்டங்கள் பற்றி அவர்களுக்கென்ன கவலை? இப்போது அவர்களது கவலையெல்லாம் திருநெல்வேலியில் விரைவில் நடைபெறவிருக்கும் மாநில இளைஞர் அணி மாநாட்டைப் பற்றித்தான்! அதற்காகத்தான் அந்த நண்பர்கள் பேசுகிறார்கள். கண்டனம் - கேலியென முழங்குகிறார்கள்.

உலகின் வரலாற்று நாயகர்களைப் பற்றி - தியாக சீலர்களைப் பற்றி - தீரர்கள், வீரர்கள் பற்றி எழுதினால்;

இப்போதுதானே இதெல்லாம் இளைஞர்களைக் கவர்ந்திழுக்க எழுதுகிறார் - என்று தங்களுக்கே உரிய நாராச நடையில் பொய், புளுகு, புரட்டுக்களை அறிக்கைகளாக்கி, என் எழுத்துக்கு உள்நோக்கம் கற்பித்து வெளியிட்டு மகிழ்கிறார்கள்.


இளைஞர்கள், இன உணர்வு பெற வேண்டுமென்றும் - இயக்கத்தின் இலட்சியங்களை உணர்ந்து இடையறாப் பணி ஆற்ற வேண்டுமென்றும் - என் உள்ளத்தில் என் இளம் பிராயத்திலேயே (1937-1938) 13 வயதிருக்கும் போதே "செல்வ சந்திரா" எனும் புதினம் எழுதி, அதன் முன்னுரையிலேயே


தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!

* முன்னுரை *

அன்புடையீர்,

தற்கால திராவிடநாடு ஆரியன்
னவலையில் சிக்கி, திராவிடர்தம் கலை, நாகரீ
கம் எல்லாவற்றையும் பறிகொடுத்து நம்பிக்
கையிழந்து தத்தளித்துக் கொண்டி
ருக்கிறது. இங்ஙனமாயில் திராவிடநாட்டு
மொழிகளாம் தமிழ், தெலுங்கு, மலையாள
ம், கன்னடம், துளுவம் என்பனவற்றில்
தலைசிறந்ததான தமிழைக் கொலைக்கொண்ட
காலத்தில் நடைபெறும் சூழ்ச்சிகள்
பற்பல. திராவிடர் விழித்துக் கொள்ளும்


காலம் நெருங்கிவிட்டது. பெரும்பாலா
ன திராவிடர் வீறுகொண்டெழுந்து விட்
டனர். நாட்டைக் காப்பாற்றவும் கலை, நாகரீ
கத்தைக் காக்கவும் கச்சைகட்டி விட்டனர்
தற்கால திராவிட நாட்டின் திலகம்
ஈரோட்டு ராமன் என்று இணையற்ற
தளபதியின் கீழ் திராவிடர் அணிவகுத்
து நின்று ஆர்ப்பரிக்கின்றனர். இக்காலம்
இங்ஙனமிருக்க முற்கால திராவிடநாடு
எங்ஙனமிருந்தது என்பதை அறிவோம்.
அக்காலத்தில் தமிழ்வேந்தராம் சேரர்,
சோழர், பாண்டியர் காலத்தே அரசைக்க
விழ்க்க பற்பல சூழ்ச்சிகள் நடைபெற்ற
ன. அதைவிளக்க இடைப்பட்ட
சோழர் அரசாங்கத்தைக் கவிழ்க்கச்
செய்த சூழ்ச்சியை விவரிப்போம் என்
ற நோக்கத்துடன் இதை எழுதுகின்றேன்.
T.M. கருணாநிதி

இவ்வாறு குறிப்பிடும் அளவுக்கு இலட்சிய தாகம் இருந்துள்ளது. மேலே வெளியிடப்பட்டுள்ள என் கையெழுத்து ஆதாரம் "கலைஞரின் கவிதை மழை" என்ற பெரிய நூலில் வெளியிடப்பட்டுள்ளதை, எப்போது வேண்டுமானாலும் எரிச்சல்கார நண்பர்கள் பார்த்துத் தெளிவு பெறலாம்.

அதைத் தொடர்ந்து 1942-இல் அண்ணாவின் "திராவிட நாடு" இதழில்; "இளமைப் பலி" என்ற எனது கட்டுரையும் வெளி வந்துள்ளது.

அதன் பிறகு 1945இல் - நான் எழுதிய "கிழவன் கனவு" என்ற குறுங் கதைப் புத்தகம் வெளி வந்ததில் - "எங்கு பார்க்கினும் விடுதலை விருத்தம்! எங்கும் சமதர்ம சங்கநாதம்! தமிழொளியை அரசியலில் இணைத்து திராவிடர் உரிமையோடு, உடைமையோடு, உண்மையோடு உள்ள எழுச்சியோடு உவகை உந்த வாழ்ந்திடும் வரலாறு! ஒரு தமிழன் தன்மானமின்றி அய்யரைச் சாமி என்றழைத்ததற்காக ஆறு மாத கடுங்காவல்! சாது எனக் கூறி, சூது செய்த ஒருவன் சாகும் வரையில் சிறைப்பட்டான்! பட்டமும் பதவியும் நமது திட்டமென ஒரு பத்திரிகாசிரியன் எழுதியதற்காக மக்கள் மன்றத்திலே அவன் மண்டூகம் எனப் பட்டான். ஏழையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மிகுதியாக ஏற்பட்டதாம் ஆநிரைகோ என்ற தமிழனுக்கு! சாதி, மதம், கடவுள்கள் என்ற கற்பனைப் பூச்சாண்டிகள் ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் உலவின என்று உரநெஞ்சன் என்ற சரித்திர ஆசிரியர் ஒரு நூலில் குறிப்பிட்டிருந்தார். இந்தி எதிர்ப்பு! சிறைச்சாலை! தாளமுத்து, நடராஜன் களப்பலி! தமிழைக் காக்கச் சிறை சென்ற பெண்மணிகளின் புறநானூறு! மானங்காக்க மாணவர் செய்த கிளர்ச்சி! ஓமான் கடல் மறைத்த சர். ஏ.டி.பன்னீர்செல்வம்! இதனை அந்தக் கிழவன் கனவாகக் கண்டான்" என்று குறிப்பிட்டிருப்பதை கருத்துக் குருடர் தவிர மற்றவர்கள் கண்டு மகிழ முடியும். அது என்ன! இப்போது எழுதியதா? 84 வயதில்? இல்லை! 1945இல் - என் 21வது வயதில் எழுதியது! நூலின் பெயர் "கிழவன் கனவு" அப்போது விலை ரூ.1.25 - அதை அப்போது எழுதிய இந்த இளைஞனுக்கு வயது, 21 தான்! பொல்லாங்கு பேசுவோர் இதைப் புரிந்து கொள்வது நல்லது!

1942ஆம் ஆண்டு, 18 வயதிலேயே அண்ணாவின் "திராவிட நாடு" வார இதழில் "இளமைப் பலி" என்ற கட்டுரை எழுதியவன் நான். எனவே இலட்சியத்துக்காக இளமையைப் பலி கொடுக்கவும், இதோ தயார்! என எழுந்த இளைஞர் கூட்டத்தில் ஒருவன்தான், இன்று முதிர்ந்த வயதில் மாநில இளைஞர் அணி மாநாட்டுக்காக - வரலாற்று நாயகர்கள் பற்றி 15 கட்டுரைகள் தீட்டி, அவர்களின் நாட்டுப் பற்று - சமுதாயப் பற்று - போன்ற கொள்கைக் கோட்பாடுகளை, இலட்சிய வேட்கைகளை நினைவூட்டி - புதியதோர் இளைஞர் எழுச்சி பூத்துக் குலுங்கிட எழுதுகோல் எடுத்து,

இளைஞனே

விழி! எழு!

நல் எண்ணங்களை எங்கணும் நடு!

எனத் தீட்டிடுக!

தீரர்களுக்கான அழைப்பு என்று வீர இளைஞர்காள்! உமை வேண்டுகிறேன்.

மாநாட்டுத் தலைவரும், மாநில இளைஞர் அணிச் செயலாளருமான தம்பி மு.க.ஸ்டாலின், காற்றினும் கடிய வேகத்தில் மாநாட்டுக்கான ஆக்கப் பணிகள் அருமையாக அமைந்திட -

அங்கிங்கெனாதபடி எங்கெங்கும், சுற்றுப் பயணம் செய்கிறார்.

அவருடன் இளைஞர் அணியின் எழுச்சிப் படையும் அணிவகுத்திடக் கண்டு அகமகிழ்கிறேன்.

மாநாட்டுக்கான முதல் விளம்பர அழைப்பே, முத்துக் கோத்தது போல் நம்மை முறுவலித்திட வைக்கிறது!

மேலும் அடுத்தடுத்த சிறப்புகளை டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில் நெல்லையில் காண்போம்.

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 23.11.2007)

### கடும் மழை எதிரொலி: சென்னையில்

## உணவுப் பொருள்கள் - மின் விநியோகம் குறித்த ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர்கள் கே.என்.நேரு - க.பொன்முடி பங்கேற்பு!

சென்னை, டிச. 9 -

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலின் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பால், குடிநீர் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் விநியோகம், மின் விநியோகம் மற்றும் களப்பணி நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசும்போது தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு, களப்பணி நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். பால், குடிநீர், உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை எவ்வித குறைபாடின்றியும் வழங்கிட வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தேங்கிய மழை நீரை அகற்றுவதோடு சீரான மின்விநியோகம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், தூய்மைப் பணிகளை தொடர்ந்து சிறப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும். போக்குவரத்திற்கு இடையூறின்றி செல்வதற்கு உரிய நடவடிக்கைகள் உள்ளிட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அலுவலர்கள் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் ஹனீஸ் சாப்ரா மற்றும் காணொலிக்காட்சி வாயிலாக கண்காணிப்பு அலுவலர்கள், மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாம்பலம் அ.சந்திரசேகர் தலைமையில்

## நூல்கள் வெளியீட்டு விழா!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிடுகிறார்!

செஞ்சி, டிச. 9-

திருவண்ணாமலை நந்தினி பதிப்பகம் குறிஞ்சி வாசகர் வட்டம் சார்பில் நாளை (10.12.2023) காலை 10 மணியளவில் செஞ்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பாராட்டு விழா, நூல்கள் வெளியீட்டு விழா, பாரதி பிறந்த தின விழா என முப்பெரும் விழா நடைபெறுகிறது.

அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்க அவை முன்னவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

ந.சண்முகம் வரவேற்கிறார். நே.சிற்றரசு, பெ.சு. விஜயகுமார், ஆர்.பூபதி, மெக்தியார் அலி, கோ.தமிழரசன், துரை திருநாவுக்கரசு முன்னிலை வகிக்கின்றனர்.

நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் திருமதி. கே.அல்லியின் இரண்டு நூல்களை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிட்டு பேசுகிறார்.

வே.காளிதாஸ், கா. கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்கிறார்கள்.

பூவழகன் நன்றி கூறுகிறார்.





நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்நேரு, பெருங்குடி மண்டலம், வார்டு–190, துலுக்கானத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகரில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட 1000 நபர்களுக்கு நிவாரணப் பொருட்களை நேற்று (08.12.2023) வழங்கினார். இந்நிகழ்வில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மண்டல கண்காணிப்பு அலுவலர் திருமதி வி.ஆர்.சுப்புலட்சுமி, தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், மாமன்ற உறுப்பினர் பி.சிவப்பிரகாசம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (08.12.2023) மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அடையார் ஆற்றங்கரையோர பகுதிகளான நெருப்புமேடு, ஜோதி தோட்டம், ஜோதியம்மாள் நகர், செட்டித்தோட்டம், விநாயகபுரம், சித்ரா நகர், கோட்டூர்புரம், வாம்பே குடியிருப்பு ஆகிய பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு வீடு வீடாக தேடிச் சென்று 5 கிலோ அரிசி, 1 போர்வை, 1 தண்ணீர் பாட்டில் மற்றும் பிஸ்கட் ஆகிய பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், கிருஷ்ணமூர்த்தி, மண்டலக்குழுத்தலைவர்கள் துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.






சென்னை மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் தொகுதி, எண்ணூர் சுனாமி குடியிருப்பில் உள்ள மக்களுக்கு பால், பிரட் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் கே.பி.பி.சங்கர் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பகுதி கழக செயலாளர்கள், கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

### டிசம்பர் 18 அன்று

# கோவையில் சிறுபான்மையினர் உரிமைகள் தினம்!

## மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அறிக்கை!



சென்னை, டிச. 9 -
கோவையில் வருகிற 18 ஆம் தேதி சிறுபான்மையினர் உரிமைகள் தினம் நடைபெறும் என்று சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த அவரது அறிக்கை வருமாறு:-

ஆண்டுதோறும் டிசம்பர் 18 அன்று இந்திய முழுமையும், சிறுபான்மையினர் உரிமைகள் நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம், சிறுபான்மையினர் உரிமைகள் நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

2021இல் சென்னையிலும், 2022இல் மதுரையிலும் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு 2023 விழாவினை கோயம்பத்தூரில் கொண்டாட ஆணையம் சிறப்பான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இந்த ஆண்டு கோயம்பத்தூர் நிர்மலா மகளிர் கல்லூரியில் நடக்க இருக்கும் இவ்விழாவில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலைமை ஏற்கவும் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், அறிமுக வுரை, வரவேற்புரையாற்றுகின்றனர்.

வீட்டுவசதி துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வு துறை அமைச்சர் சு.முத்துசாமி, சமூக நலன் & மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பேராசிரியர் முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா,முனைவர்இனிகோ இருதயராஜ், ஆளூர் ஷாநவாஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் க.நவாஸ் கனி, கோவை நடராஜன் மற்றும் கோவை மாநகராட்சி மேயர் ஏ.கல்பனா ஆகியோரும் சிறப்புரையாற்றுகின்றனர்.

கோவை கத்தோலிக்க உயர் மறைமாவட்ட ஆயர் தாமஸ் அக்வினாஸ், கோவை தென்னிந்திய திருச்சபை ஆயர் திமோதி ரவீந்தர் தேவ் பிரதீப், பெந்தகொஸ்தே திருச்சபை அப்போஸ்தலர் டாக்டர் டேவிட் பிரகாசம், கோவை ராமநாதபுரம் சீரோ மலபார் கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் மார் பால் ஆலப்பாட், தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை தலைவர் அல்ஹாஜ் பி.ஏ.காஜா முயீனுத்தீன் பாகவி, ஹிதாயத்துல் இஸ்லாம் ஷாபியா ஜமாத் தலைவர் அல்ஹாஜ் எம்.ஏ. இனாயத்துல்லா, ஸ்ரீ கோயம்புத்தூர் ஜெயின் மகாசங்கம் தலைவர் பவர்லால்ஜி கோத்தாரி, ஸ்ரீ கோயம்புத்தூர் ஜெயின் மகாசங்கம் செயலாளர் குலாப்சந்த் மேத்தா ஆகியோர் ஆசியுரை வழங்குகிறார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் திருமதி. மு. ஆசியா மரியம் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி நிர்மலா மகளிர் கல்லூரி செயலாளர் முனைவர் அருட்சகோதரி.குழந்தை தெரேஸ், நிர்மலா மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் அருட்சகோதரி. மேரி ஃபேபியோலா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர் செயலர் வா.சம்பத் மற்றும் ஆணைய உறுப்பினர்கள் தமீம் அன்சாரி, ஹர்ப்ஜன் சிங் சூரி, மஞ்சித்சிங் நய்யர், பிரவீன்குமார் டாட்டியா, பியாரிலால் ஜெயின், முனைவர் டான் போஸ்கோ, முனைவர் இருதயம், சங்கைக்குரிய பிக்கு மௌரியர் புத்தா ஆகியோரும் கலந்துகொள்கிறார்கள்.

இந்நிகழ்வில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக பி.எஸ்.சரவணக்குமார், ஏ.ஜெரிலூயிஸ், க.உமர்சாகிப், கோவை ஆல்வின், எம்.ஆர். முருகேசன், ஏ. சாதிக் பாட்ஷா ஆகியோர் இருந்து விழா ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

சிறுபான்மையினர் ஆணையம் துணைத் தலைவர் டாக்டர் இறையன்பன் குத்தூஸ், நன்றியுரை ஆற்றுகிறார். விழாவில் கோவை நிர்மலா கல்லூரி மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

### பெருமழை - புயலால் பாதிக்கப்பட்ட

# திருவொற்றியூர் பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினர்!

சென்னை, டிச. 9 -
தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தொடங்கிய பின்னர், கடந்த ஒரு வாரமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில், வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள 'மிக்ஜாம்' புயல் காரணமாக, தொடர்ந்து பெய்துவந்த வரலாறு காணாத மழையால், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இந்த புயல் மழையின் தாக்கம் மிக அதிகமாக ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்னலில் இருக்கும் மக்களுடன் நமது அரசு என்றும் துணை நிற்கும். கட்சி வேறுபாடுகளைக் கடந்து, மக்கள் சக்தியின் துணை கொண்டு இயற்கைப் பேரிடரின் பாதிப்புகளை விரைந்து களைவோம். இயற்கையின் கோரத் தாண்டவத்தை மனிதத்தின் துணைகொண்டு வெல்வோம். அரசோடு கரம் கோத்து சகமனிதரின் துயர் துடைத்திட தொண்டுள்ளம் படைத்த எல்லோரும் ஓரணியாய் திரள கரம் கூப்பி அழைக்கிறேன்" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர்கள் தலைமையில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று நிவாரணப் பொருட்கள் வழங்கி பாதுகாக்க வேண்டும் என அறிவித்துள்ளார்.

அதன்படி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை திருவொற்றியூர் பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் பணியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் ஆகியோர் தலைமையில் நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிவாரணப்பணியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகளுடன் திருவொற்றியூர் பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.





அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ. பிரதான சாலையை சுற்றியுள்ள தெருக்களில் கனமழையால் உருவான கழிவுநீர், குப்பைக் கழிவுகள் அகற்றும் பணிகளை மேற்பார்வையிட்டு, மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். தொடர்ந்து உழைத்துக்கொண்டிருக்கும் சுகாதார பணியாளர்களுக்கும். அரசு அலுவலர்களுக்கும் ஒத்துழைப்பு நல்கிய பொதுமக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

### சோழிங்கநல்லூர், அடையாறு, பெருங்குடி, மணலியில்

# அமைச்சர் கே.என்.நேரு நிவாரணப் பொருட்கள் வழங்கினார்!

## களப்பணிகளை தீவிரப்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவு!

சென்னை, டிச. 9 -
நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என் நேரு அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர், பெருங்குடி, அடையாறு மற்றும் மணலி ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் (07.12.2023) கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகள், பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவு விநியோகம் ஆகிய வற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் சோழிங்கநல்லூர் மண்டலம், நூக்கம் பாளையம் லிங்க் சாலையில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு, தேங்கியுள்ள மழைநீரினை அகற்றும் பணியினைப் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் சிறப்பாக மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வரப்பெற்ற உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களைப் பார்வையிட்டு மக்களுக்கு வழங்கினார்.

பின்னர், ஒக்கியம்மடுகு கால்வாயில் மழைநீர் வடிந்து சீராக செல்வதற்கு ஏதுவாக அக்கால்வாயிலிருந்த ஆகாயத்தாமரைகள் மற்றும் குப்பை கழிவுகளை இயந்திரங்கள் மூலம் அகற்றும் பணியினைப் பார்வையிட்டு மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தினார். பின்னர் அப்பகுதி மக்களுக்காக வரப்பெற்ற உணவு மற்றும் நிவாரணப் பொருட்களைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு எவ்வித குறைபாடுமின்றி வழங்கிட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பெருங்குடி மண்டலம், துரைப்பாக்கம், பல்லாவரம் 200 அடி ரேடியல் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ச்சியாக, மடிப்பாக்கம் குபேரன் நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மீட்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பால், ரொட்டி உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார்.

தொடர்ந்து, அடையாறு மண்டலம், வேளச்சேரி, விஜயநகர் பேருந்து நிலையம் பகுதியில் தேங்கியுள்ள மழைநீர் அகற்றும் பணியினைப் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திடவும், இப்பகுதி மக்களுக்கு சீரான மின்விநியோகம் வழங்கிடவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்

பின்னர், மணலி மண்டலத்தில் எஸ்.ஆர்.எஸ். லிமிடெட் நிறுவனத்தில் மிக்ஜாம் புயல் நிவாரணப் பணிகளுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள உணவு தயாரிக்கும் கூடத்தினையும், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் எவ்வித குறைபாடுமின்றி வழங்கிடவும், நிவாரணப் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, ஆமுல்லைவாயில் பாலம் அருகில், புழல் ஏரியின் உபரிநீர் வெளியேறும் பகுதியினையும், அதன் வரைபடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மக்களின் வாழ்விடங்களில் இயல்பு நிலை திரும்புவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர், மாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அரிசி, ரொட்டி உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், எஸ்.சுதர்சனம், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப் பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர்/ மிக்ஜாம் புயல் மீட்புப் பணி சிறப்பு அலுவலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி.வினய், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திருவீரராகவ ராவ், திருமதி எஸ். திவ்யதர்ஷினி, சிவகுரு பிரபாகரன், தெற்கு வட்டார துணை ஆணையர் எம். பி.அமித், மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், ஏ.வி.ஆறுமுகம் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 'மிக்ஜாம்' புயல் பாதிப்பு: தமிழ்நாடு முழுவதும் இன்று 3000 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்!

# சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் - 1000 முகாம்கள்!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 9 -
முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு முழுவதும் இன்று (09.12.2023) 3000 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறும் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் 1000 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறும்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் முகாமினை தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொள்கிறார்.

அதன் விபரம் வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு முழுவதும் இன்று (9.12.2023) 3000 மருத்துவ மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறுகிறது, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் 1000 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறுகிறது.

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே மக்கள் நல்வாழ்வுத்துறையும், உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் கடந்த 23.10.2023 தொடங்கி தற்போது வரை வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும் முகாம் 1000 என்று அறிவிக்கப்பட்டு 2000த்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடைபெறுகிறது. அந்தவகையில் கடந்த 6 வாரங்களில் இது வரை 13,234 முகாம்கள் நடைபெற்று அதில் 6,50,585 பேர் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர்.

மிக்ஜாம் புயல் பாதிப்பு காரணமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இன்று (09.12.2023) மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் தமிழ்நாடு முழுவதும் 3000 இடங்களிலும், அதில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சென்னை மாவட்டத்தில் 500 முகாம்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 200 முகாம்களும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 200 முகாம்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100 முகாம்கள் என்று 1000 சிறப்பு மருத்துவ முகாம்கள் காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை நடைபெறும்.

தமிழ்நாடு முழுவதும் இன்று நடைபெறும் 3000 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களை தொடங்கி வைக்கும் வகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் - சென்னை சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட கோதாமேடு பகுதியில் முகாமினைத் தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொள்கிறார்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் உள்ள சக்கம்பட்டி முத்துமாரியம்மன் நகர் அரசு உயர்நிலைப்பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் பள்ளி சுற்றுச்சுவர் கட்டும் பணியை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் துவக்கி வைத்தார். உடன் ஆண்டிபட்டி பேரூராட்சி, துணை சேர்மன் ஜோதிசேகர், ஒப்பந்ததாரர் ஜெயபால் மற்றும் கட்சி நிர்வாகிகள் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டல அலுவலகத்தில் நேற்று (08.12.2023) கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மீன்வளம் / மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர் . ராதாகிருஷ்ணன் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் மிக்ஜாம் புயல் மழை வெள்ள நிவாரண பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது, உடன் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தண்டையார் பேட்டை கண்காணிப்பு அலுவலர் டாக்டர்.சு.பிரபாகர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகர், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், எபிநேசர், நந்தகுமார் மற்றும் மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன், மண்டல அலுவலர் என்.விஸ்வநாதன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உள்ளனர்.

அமைச்சர்கள் முதல் கடைநிலைப் பணியாளர்கள் வரை ஓய்வின்றி உழைக்கிறார்கள்!

# விரைவில் நிலைமை சீரடையும்!

## சென்னையில் நிவாரணப் பணிகள் மேற்கொண்டு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 9-

'மிக்ஜாம்' புயல் காரணமாக பெய்த பெருமழையால் பாதிக்கப்பட்ட கொளத்தூர், திரு.வி.க.நகர் மற்றும் எழும்பூர் தொகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொண்ட பின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "விரைவில் நிலைமை சீரடையும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலை தளப் பதிவு வருமாறு:-

**கொளத்தூர், திரு.வி.க. நகர் மற்றும் எழும்பூர் தொகுதிகளில் 'மிக்ஜாம்' புயல் (CycloneMichaung) பெருமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டேன்.**

**வெள்ளநீர் தேங்கியிருக்கும் நிலையில், மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவும், உயிரிழப்புகளைத் தடுக்கவும்தான் சில இடங்களில் மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை.**

**மின் இணைப்புகள் வழங்கும் பணிகள் கவனத்தோடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

**அமைச்சர்கள், அதிகாரிகள் முதல் கடைநிலைப் பணியாளர்கள் வரை மக்களைப் பாதுகாக்கக் களத்தில் ஓய்வின்றி உழைத்து வருகிறார்கள். விரைவில் நிலைமை சீரடையும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

மிக்ஜாம் புயல்: மழை, வெள்ளச் சேதங்களை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்ட பின்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் - ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை!

சென்னை, டிச. 9-

சென்னையில் மழை, வெள்ளச் சேதத்தை ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஹெலிகாப்டர் மூலம் ஆய்வு செய்தார். மிக்ஜாம் புயல் மழை காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் கொட்டித் தீர்த்த கனமழையால் பல பகுதிகள் இன்னும் தண்ணீரில் மிதக்கிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது. மீட்பு நடவடிக்கைகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விரைவுபடுத்தி வருகிறார். அனைத்து அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், உயர் அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தன்னார்வலர்கள் என பலரும் கடந்த 3 நாட்களாக பம்பரமாகச் சுழன்று பணியாற்றி வருகிறார்கள். இதன்மூலம் 80 சதவீதத்திற்கும் மேல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்கள் சரி செய்யப்பட்டுள்ளன.

'மிக்ஜாம்' புயல் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள கடும் சேதங்களை சரிசெய்திட இடைக்கால நிவாரணமாக ரூ.5,060 கோடி வழங்கிடக் கோரி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்த நிலையில் சென்னை மற்றும் புறநகர் வெள்ள பாதிப்புகளை நேரில் பார்வையிட ஒன்றிய அரசின் பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று முன்தினம் காலை சென்னை வந்தடைந்தார். அவர் ஹெலிகாப்டர் மூலம் நேற்று முன்தினம் பிற்பகல் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூரில் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். மிக்ஜாம் புயல் பாதிப்புகள், மீட்புப் பணிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அப்போது ஒன்றிய அமைச்சர் முருகன், தமிழக நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆகியோரும் உடன் சென்றனர். பின்னர் தலைமைச் செயலகம் வந்த ராஜ்நாத் சிங் முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் 1.30 மணி முதல் 2.30 மணி வரை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

ஆய்வுக்குப் பின்னர் ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங், தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

கொடநாடு : நேரில் ஆஜராவதில் இருந்து எடப்பாடி பழனிசாமி

# விலக்களிக்கக் கோரும் காரணம் ஏற்கும்படி இல்லை!

## சென்னை உயர்நீதிமன்றம் கருத்து!

சென்னை, டிச. 9-

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்களிக்க தெரிவிக்கும் காரணங்கள் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சென்னை உயர்நீதிமன்றம் கண்டித்துள்ளது.

ஜெயலலிதாவின் கொடநாடு பங்களா கொலை, கொள்ளை வழக்கில் தன்னை தொடர்புபடுத்தி வீடியோ வெளியிட்ட டெல்லியைச் சேர்ந்த பத்திரிகையாளர் மேத்யூ சாமுவேல், வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சயான் மற்றும் வாளையார் மனோஜ் ஆகியோருக்கு எதிராக 2019ஆம் ஆண்டு எடப்பாடி பழனிசாமி, ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக மாஸ்டர் நீதிமன்றத்தில் ஆஜராக எடப்பாடி பழனிசாமிக்கு விலக்கு அளித்து தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார். இதை எதிர்த்து மேத்யூ சாமுவேல் மேல்முறையீடு செய்துள்ளார். இதன்மீதான விசாரணை சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகள் முன்பு நடைபெற்றது.

அப்போது, எடப்பாடி பழனிசாமி தரப்பை நோக்கி, எதனடிப்படையில் ஆஜராவதில் இருந்து விலக்குக் கோருகிறீர்கள்? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த எடப்பாடி பழனிசாமி தரப்பு, காலில் ஏற்பட்டுள்ள காயம் மற்றும் பாதுகாப்பு காரணங்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு விலக்கு கோருகிறோம் எனத் தெரிவித்தனர்.

எனினும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும், நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்குக் கோர எடப்பாடி பழனிசாமி தெரிவிக்கும் காரணங்கள் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, விரிவாக வாதிட அனுமதிக்க வேண்டுமென்று எடப்பாடி பழனிசாமி தரப்பு கோரிக்கை வைத்தது. இதையேற்று விசாரணையை வருகிற 15ம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

புயலால் பாதிக்கப்பட்ட

# நடைபாதை வியாபாரிகளுக்கு சிறப்புக் கடனுதவி!

## கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!



சென்னை, டிச.9-

"மிக்ஜாம் புயல்" காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்க ளுக்கு தங்குதடையின்றி காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்கள் கிடைக்கும் வகையில் கூட்டுறவுத்துறை யின் மூலம் சென்னை, தேனாம்பேட்டை காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடியிலிருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்களை விற்பனை செய்ய செல்லவுள்ள நகரும் காய்கறி மற்றும் மளிகைப் பொருட்கள் விற்பனை வாகனத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (07.12.2023) ஆய்வு செய்து அனுப்பிவைத்தார்கள்.

அங்கு நடைபெற்ற செய்தியார்கள் சந்திப்பில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்ததாவது:

கடந்த 3ஆம் தேதி முதல் மிக்ஜாம் புயலின் காரணமாக சென்னையில் பெருமழைபெய்தது. இது வரை 47 ஆண்டுகள் இல்லாத வகையில் அதிகமாக மழை பெய்துள்ளதை நாம் அறிவோம். அப்படிப் பெய்த பெரும் மழையில் கூட இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்த அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் காரணமாக மழை நீர் வாய்க்கால்கள் கட்டுமானப்பணிகள் எல்லாம் முழுமையாக முடிக்கப்பட்ட காரணத்தினாலும், அதைப்போல வாய்க்கால்கள் எல்லாம் பல இடங்களில் தூர்வாறப்பட்ட காரணத்தினாலும் தங்கு தடையின்றி மழை நீர் செல்ல எல்லா சூழ்நிலை களும் இருந்தும், ஏற்கனவே அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டதைப் போல, கடலில் ஏற்பட்ட சீற்றத்தின் காரணமாக பெரு அலைகள் ஏற்பட்டு, அந்த அலைகள் நகரத்திலிருந்து செல்லக்கூடிய தண்ணீரை உள்வாங்க முடியாமல் தண்ணீர் தேங்கியதாலும் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங் களில் குடியிருப்பு பகுதிகளில் பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது. அப்படி ஏற்பாட்ட பகுதிகளில் இதுவரை எந்த அரசும் செய்யாத நிவாரணப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு செய்து, பாதிப்பிற்குள்ளான மக்களிடத்தில் அந்த பாதிப்பு சுவடு தெரியாத வகையில் வைத்திருக்கிறது.

தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் இரவு பகல் பாராமல் அனைத்து அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், அனைத்து செயலர்கள், அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இயக்கத்தினர் என அனைவருடனும் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் கிடைப்பதற்கு அவ்வப்போது அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள். அதன் காரணமாக தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளும் முடுக்கிவிடப்பட்டு, இன்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் முதற்கட்ட மாக தேங்கியிருக்கக் கூடிய தண்ணீரை அப்புறப்படுத்தப்படும் பணிகள் ஏறத்தாழ 80 சதவீதம் முடிந்துள்ளது. எஞ்சிய இடங்களில் இன்னும் ஓரிரு நாட்களில் தண்ணீர் வடிக்கப்பட்டு சகஜ நிலை திரும்பும்.

அதே நேரத்தில் பாதிக்கப்பட்டுள்ள மீன்பிடி பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களான பால், காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்கள் போன்ற பொருட்களை அவர்கள் இருக்கின்ற இடங்களுக்கே கொண்டு சேர்க்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதில் குறிப்பாக கூட்டுற வுத்துறையின் மூலம் இப்பணிகளை சிறப்பாக செய்வதற்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதற்காக நேற்றைய தினம் 10 நகரும் பண்ணை பசுமை காய்கறி விற்பனை வாகனங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்றது. தொடர்ந்து இன்றைய தினம் அதன் எண்ணிக்கை 50 ஆக உயர்த்தப்பட்டு இந்த வாகனங்களில் காய்கறிகள், மளிகைப்பொருட்கள் மற்றும் ஆவின் பால் ஆகியவை எடுத்துச் செல்லப்பட்டு நியாயமான விலையில் விற்பனை செய்ய முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில், இன்று இந்தப்பணிகள் தொடர்ந்து நடைபெறுகிறது. ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்களில் செல்லுகின்ற இந்த நகரும் விற்பனையகங்கள் தேவைக்கேற்ப இன்னும் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அதிகரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஒருசில நியாயவிலைக்கடைகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக 17 கடைகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த கடைகள் எல்லாம் சரிசெய்யப்பட்டு, சீராக இயங்குகின்ற நிலைக்கு வந்துளது. மேலும், பதிவாளர் அலுவலகம், மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம் போன்ற அலுவலகங்களும் நீர்சூழ்ந்த பகுதிகளாக இருந்தன. அந்த அலுவலகங்கள் இருந்த நீர் வெளியேற்றப்பட்டு சீராக அலுவலகங்கள் இயங்குகின்ற நிலைக்கு வந்துள்ளது. பாதிக்கப்பட்ட நியாயவிலைக் கடைகள் தவிர மற்ற நியாயவிலைக் கடைகளில் குடிமைப் பொருட்களான அரசி, சக்கரை போன்ற பொருட்கள் மட்டும் அல்லாமல், தேவைக்கேற்ப, இப்போது எப்படி நகரும் வாகனங்கள் மூலம் காய்கறிகள் மற்றும் மளிகைப்பொருட்கள் எடுத்துச் சென்று விற்பனை செய்யப்படுகிறதோ, அதேபோல இடவசதி உள்ள கடைகளில் தேவைப்படும் இடங்களில் காய்கறிகள் மற்றும் மளிகைப்பொருட்கள், ஆவின் பால் விற்பனை செய்ய ஆலோசித்துள்ளோம். அதுவும் நடைமுறைப்படுத்தப்படும்.

அதேபோல காய்கறிகளைப் பொறுத்தவரையில் கிலோ ஒன்றுக்கு, தக்காளி ரூ.30க்கும், வெங்காயம் ரூ.50க்கும், உருளைக்கிழங்கு ரூ.16க்கும், செளசெள ரூ.25க்கும், மிளகாய் ரூ.40க்கும், பீன்ஸ் ரூ.55க்கும், பீர்க்கங்காய் ரூ.50க்கும், பீட்ரூட் ரூ.60க்கும், முட்டைகோஸ் ரூ.20க்கும் விலைகள் நிர்ணயிக்கப்பட் டுள்ளது. வெளிச்சந்தைகளில் இதன் விலைகள் எல்லாம் கூடுதலாக இருக்கும். அதைப் போல மளிகைப் பொருட்கள் ஒவ்வொரு வாகனங்களிலும், மஞ்சள் ட்க்ஹூள், சர்க்கரை, துவரம்பருப்பு, பாசிப்பருப்பு, உளுந்தம் பருப்ப், கடுகு, மிளகு, சீரகம், சமையல் எண்ணெய், டீ தூள், புளி, அரசு கல் உப்பு, ராகி மாவு, பொட்டு கடலை, கடை பருப்பு ஆகிய 15 வகை மளிகை பொருட்களும் இந்த வாகனங்களில் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளின் போது உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.

அயலக தி.மு.க. - குவைத் தளபதி பேரவை சார்பில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## மருத்துவர் சாந்தமூர்த்தி தலைமை - பட்டுக்கோட்டை சரவணன் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது!

குவைத், டிச. 9-

அயலக திராவிட முன்னேற்றக் கழகம் குவைத் தளபதி பேரவை சார்பாக, கழக இளைஞரணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா குவைத் பாலிவுட் உணவகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் அவைத் தலைவர் மருத்துவர் சாந்தமூர்த்தி தலைமையில், தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன் ஒருங்கிணைப்பில், கௌரவத் தலைவர் ஜெயபாலன், செயலாளர் அம்மையப்பன் செல்வம், பொருளாளர் காளிதாசன், முதன்மைச் செயலாளர் மண்டலம் மதிவாணன், அமைப்பாளர் போத்தியப்பன், அமைப்புச் செயலாளர் பழனி நல்லரசு முன்னிலையில் கலை இலக்கிய அணி செயலாளர் அருவிக் கவிஆனந்த ரவி, நெல்லை பேட்டை பிலால், பொறியாளர் அணிச் செயலாளர், தஞ்சை காதர் இளைஞர் அணி செயலாளர், பொறியாளர் சேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் இதில் கூட்டணி கட்சியான வி.சி.க. கா.மீ.அன்பரசன், த.மு.மு.க. கம்ருதீன், பஜ்ருல்லா, காங்கிரஸ் கட்சி சையது அலிகான். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மன்னை ராஜேந்திரன், ம.தி.மு.க. ஆறுமுகம், ம.ஜ.க. நபீஸ், மற்றும் குவைத் தளபதி பேரவை நிர்வாகிகள், உடன்பிறப்புகள், கலந்து கொண்டு துணைத் தலைவர் குடந்தை ரபிக், துணைச்செயலாளர் மயிலாடுதுறை ராஜா,மருத்துவ அணி செயலாளர் திருத்துறைப் பூண்டி சிவக்குமார், ஹக்கீம் முத்து காமாட்சி, இளங்கோவன், ஸ்டாலின், சரவணராஜ், ரெகுநாத், ரபிக், மதுக்கூர் பிரேம், சர்தார்கான், காசி ராமலிங்கம், ஆறாம் பண்ணைசேக், சாமி மல்லேஸ்வரன், தஞ்சை அலி வலங்கைமான் பாஸ்கரன், சுரேஷ்பாபு, மன்னை விஜய், மூவாநல்லூர் அன்பழகன், அறந்தாங்கி சரவணன், மற்றும்

வலங்கைமான் விஜய குமார், மதுக்கூர் காஜாமுகைதீன் , காரைபாண்டியன், முருகேசன், அப்துல் ரகுமான், ஜீல்பிகார் அலி இராசரத்தினம் ரமேஷ் குமார், சதீஷ்குமார், ஆரோக்கியசாமி, பிரகாஷ் மைக்கேல் டோனி, விஸ்வநாதன், சாகுல்ஹமீது, விவே கானந்தன், முருகையன், பாலையூர் தமீம்முன் அன்சாரி, செந்தில்குமார், வீரமணி, பைரோஸ்கான், கிருஷ்ணமூர்த்தி, அய்யாசரவணன், பெருமாள், சாதிக் ஆறுமுகம், அலி, முகமதுயூசுப், பெரம்பலூர் ராஜா, அருண்குமார், வெற்றிவேந்தன், சக்திவேல், கிருஷ்ணமூர்த்தி, பீர்முகமது, பாட்ஷா,

பாண்டி தென்கொண்டார், கவிஞர்யாகூப்அலி, சமூக அலுவலர் ஸ்டீபன், தமிழ்மக்கள் சேவைமைய நிர்வாகி அலிபாய், தமிழ் ஓட்டுநர் சேவை மையம் நிர்வாகி சையது ஜாபர், உதயநிதி ரசிகர் மன்ற நிர்வாகி ஈரோடு முஸ்தபா, தமிழர்கள் ஓட்டுநர்சேவை மைய நிர்வாகி அலி ரிஸ்வான் , சமூக ஆர்வலர் திருவாரூர் மஜீத் மற்றும் செயற்குழு பொதுக்குழு நிர்வாக குழு உறுப்பினர்கள், தமிழ் அமைப்பைச் சார்ந்த நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், கலந்து கொண்டு பிறந்தநாள் விழாவை சிறப்பித்தனர்.

குவைத் தளபதி பேரவையின் நிர்வாகிகளாக, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது, கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டு கழக இளைஞரணி செயலாளரின் பிறந்த நாளில் அலை போல் வந்து, உதயநிதி வாழ்க, வாழ்க, வாழ்க, என ஆர்ப்பரித்த கழக தொண்டர்கள், மற்றும் வருகை தந்த அனைவருக்கும், பிறந்தநாள் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

தலைமை நிலைய செயலாளர், உ.கு .சிவக்குமார் நன்றி உரையுடன், விழா இனிதே நிறைவு பெற்றது.

செம்பனார் கோயில் மத்திய ஒன்றியத்தில்

# மாற்றுக் கட்சியினர் 381 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் முன்னிலை! அமுர்த விஜயகுமார் நிகழ்ச்சி ஏற்பாடு!

செம்பனார் கோயில். டிச.9-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் காழியப்பநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க., பி.ஜே.பி., பா.ம.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி பொறையாறில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செம்பனார்கோயில் மத்திய ஒன்றியச் செயலாளர் அமுர்தவிஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞான வேலன், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காழியப்பநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் கருணாநிதி வரவேற்றார்.

நிகழ்ச்சியில் ஒன்றியக் கழகச் செயலாளர் அமுர்தவிஜயகுமார் ஏற்பாட்டில் அ.தி.மு.க., பி.ஜே.பி., பா.ம.க., உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பா.ம.க.வைச் சேர்ந்த எம்.ஆர். கே.பிரவீன், அ.தி.மு.க. கிளை அவைத்தலைவர் என். ஜெனார்த்தனன், இளைஞர் அணி வி.விக்கேஷ் மற்றும் தமிழரசி, கலைவச்செல்வி, தனலெட்சுமி, விமல்ராஜ், முத்துகுமார், ரவிச்சந்திரன், கார்த்தி ஆகியோர் தலைமையில் 370பேரும் திருக்கடையூர் ஆட்டோ ஓட்டுநர்கள் 11 பேர் என 381 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.


தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மேற்கு மண்டலம் - ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு - மேற்கு மண்டலம் - ஆலோசனைக் கூட்டம், நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, காமராஜர் சதுக்கம், செயிண்ட் லூக்ஸ் சர்ச் -ல் அமைந்துள்ள லூக்ஸ் ஹாலில் 11.12.2023 அன்று காலை 11 மணிக்கு ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில் மாநில, துணைச் செயலாளர் கோடநாடு மு.பொன்தோஸ் ஏற்பாட்டில், கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.இராசா, அந்தியூர் பா.செல்வராஜ், மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக், அமைச்சர்கள் கா.ராமச்சந்திரன், கயல்விழி செல்வராஜ், மா.மதிவேந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இணைச் செயலாளர்கள் வி.பி.இராசன், செ.புஷ்பராஜ், திப்பம்பட்டி ஆறுசாமி, மருதூர் இராமலிங்கம், துணைச் செயலாளக்ரள் பி.துரைசாமி, அரூர் சா.இராஜேந்திரன், எஸ். மாரியப்பன், கென்னடி, சி.தசரதன், மு.பரமானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். அது சமயம் நீலகிரி மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் இ.எம்.ராம்குமார் நன்றி கூறுகின்றனர்.

இக்கூட்டத்தில் சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கரூர், ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு மாநகரம், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு மாநகரம், திருப்பூர் வடக்கு மாநகரம், கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர், நிலகிரி உள்ளிட்ட ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது-

பொருள் : சேலம் இளைஞர் அணி மாநாட்டிற்கு பெருந்திரளாக கலந்து கொள்ளுதல், ஆதிதிராவிடர் நலக்குழுவின் ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்தல்

*அண்ணா அறிவாலயம்,*
*சென்னை - 18*
*நாள் - 07 - 12 - 2023*

**ஆ.கிருஷ்ணசாமி** எம்.எல்.ஏ.,
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு





ஆவடி மாநகராட்சி பகுதி,திருமுல்லைவாயில் 26வது வட்டம் எஸ்.எஸ்.புரத்தில் பழங்குடியினர் குடியிருப்பில் வசிக்கும் நரிக்குறவமக்களுக்கு தமிழ்நாடு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கட்டில், போர்வை, அத்தியாவசிய தொகுப்பினை வழங்கினார். முன்னாள் பால்வளத் துறை அமைச்சர், ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.நாசர், ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், மாநகராட்சி ஆணையாளர் ஷேக் அப்துல் ரகுமான் மாநகர செயலாளர் சன்.பிரகாஷ், பகுதி செயலாளர்கள் பேபிசேகர், பொன்.விஜயன், ராஜேந்திரன், நாராயண பிரசாத் மற்றும் அரசு துறை அதிகாரிகள்,கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தாராபுரம் அரசு மருத்துவமனையில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த கருப்புசாமி என்பவர் பணியிடையே மரணம் அடைந்ததைத் தொடர்ந்து தாராபுரம் ஒன்றியம் குப்பிச்சிபாளையம் கிராமத்தில் உள்ள அவரின் இல்லத்திற்கு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் சென்று அவரின் மனைவி சாமியாத்தாள் என்பவருக்கு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் சார்பாக ரூபாய் ஐந்து லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கினார். இந்நிகழ்வின் போது திருப்பூர் மாவட்ட தாட்கோ மேலாளர் ரஞ்சித் குமார், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், வருவாய் வட்டாட்சியர், கோவிந்தசாமி, ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.வி.செந்தில் குமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ‘மிக்ஜாம்’ புயல்: தொழில்நிறுவனங்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள்

# முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்கிட வங்கி விவரங்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, டிச.9-**

**‘மிக்ஜாம்’ புயலினால் ஏற்பட்ட பாதிப்பினை சீர்செய்திடவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், தொழில் நிறுவனங்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்கிட வங்கி விவரங்களை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

இது தொடர்பான அரசின் செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டில் ‘மிக்ஜாம்’ புயல் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத பெருமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பேரிடர் பாதிப்பிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு தங்களின் பங்களிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், தங்கள் ஒரு மாத ஊதியத்தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கிடவுள்ளார்கள்.

இந்தச் சூழ்நிலையில், நல்லுள்ளம் கொண்ட பல்வேறு தொழில் நிறுவனங்களும், தன்னார்வ அமைப்புகளும், பொது மக்களும் இந்த மாபெரும் பணிக்கு தங்களது பங்களிப்பினையும் வழங்கிட விருப்பம் தெரிவித்து, அரசைத் தொடர்பு கொண்டு வருகிறார்கள். எனவே, பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைத்திடவும், புதிய வாழ்வாதாரங்களை மீள உருவாக்கிடவும் தொழில் நிறுவனங்களைச் சார்ந்தவர்களும், தன்னார்வலர்களும், பொதுமக்களும் முதலமைச்சர் பொது நிவாரண நிதி வாயிலாக, மிக்ஜாம் மீட்புப் பணிகளுக்குத் தங்களின் பங்களிப்பை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னதாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்வாறு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரிச் சட்டம் பிரிவு 80(G)ன்கீழ் 100 விழுக்காடு வரி விலக்கு உண்டு. வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRIs) அல்லது வெளிநாட்டு மக்களிடமிருந்து பெறப்படும் நிவாரணத்திற்கு அயல் நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்று) சட்டம் 2010, பிரிவு 50ன்கீழ் விலக்களிக்கப்படும்.

**இந்த நன்கொடைகளை மின்னணு முறை மூலம் பின்வருமாறு வழங்கலாம்.**

(1)வங்கி இணைய சேவை அல்லது கடன் அட்டை / பற்று அட்டையின் மூலமாக கீழ்க்கண்ட இணையதளம் வழியாகச் செலுத்தி பற்றுச் சீட்டினைப் (Receipt) பெற்றுக்கொள்ளலாம்.

https://cmprf.tn.gov.in

(2)Electronic Clearing System (ECS) / RTGS / NEFT மூலமாக கீழ்க் காணும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு நேரடியாக அனுப்பலாம்.

வங்கி பெயர் -இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கிளை -தலைமைச் செயலகம், சென்னை 600 009, சேமிப்புக் கணக்கு எண் -117201000000070, IFS Code–IOBA0001172, MICRCode–600020061, CMPRF PAN–AAAGC0038F

(3)UPI - VPA ID: tncmprf@iob மற்றும் PhonePe, Google Pay, PayTM, Amazon Pay, Mobikwik போன்ற பல்வேறு செயலிகள்.

(4)மேற்கண்ட ECS மூலமாக நிதி அனுப்புவோர் உரிய அலுவலகப் பற்றுச்சீட்டினைப் பெற ஏதுவாக கீழ்க்கண்ட தகவல் களைக் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பெயர், செலுத்தும் தொகை, வங்கி மற்றும் கிளை-செலுத்தப்பட்ட தேதி, நிதி அனுப்பியதற்கான எண்-தங்களது முழுமையான முகவரி, இமெயில் விவரம், தொலைபேசி /அலைபேசி எண்.

(5)நிவாரண நிதி வழங்கும் வெளிநாடுவாழ் மக்கள் கீழ்க்கண்ட SWIFT Code-ஐப் பின்பற்றிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

IOBAINBB001 Indian Overseas Bank, Central Office, Chennai.

(6)மின்னணு மூலம் பரிவர்த்தனை செய்ய இயலாதவர்கள் குறுக்குக் கோடிட்ட காசோலை அல்லது வங்கி வரைவோலை மூலமாக, “முதலமைச்சரின் பொது நிவாரண நிதி (Chief Minister’s Public Relief Fund)” என்ற பெயரில், கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்:

அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்,முதலமைச்சர் பொது நிவாரண நிதி,நிதித்துறை, தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம், சென்னை - 600 009, தமிழ்நாடு, இந்தியா.

மின்னஞ்சல் முகவரி: jscmprf@tn.gov.in

மேற்கூறிய முதலமைச்சரின்பொது நிவாரண நிதிக்கு அளிக்கப்படும் நன்கொடைகள் தவிர, நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (Corporate Social Respon sibility)-ன்கீழ் பேரிடர் நிவாரணத்திற்காக நிதியுதவி வழங்கும் நிறு வனங்கள், மாநிலப் பேரிடர் மேலாண்மை அமைப்பின் கீழ்காணும் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

வங்கி பெயர் -இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கிளை-தலைமைச் செயலகம், சென்னை 600 009,சேமிப்புக் கணக்கு எண்-117201000017908,IFSCCode–IOBA0001172.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யானைப் பசிக்கு சோளப் பொரிபோல்

# நிவாரணப் பணிகளுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கியுள்ளது!

## ‘தினகரன்’ தலையங்கத்தில் கண்டனம்!


சென்னை, டிச.9-

தமிழ்நாட்டில் புயல் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ.5060 கோடி நிதி வழங்கக் கோரி தமிழ்நாடு அரசு கேட்டதற்கு ரூ.561 கோடி மட்டும் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்தது யானைப் பசிக்கு அளித்த சோளப் பொரி போல் உள்ளது என ‘தினகரன்’ நாளேடு 8.12.2023 அன்று தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

கடலில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மிக்ஜாம் புயலாக மாறியது. அதைத்தொடர்ந்து வந்த பலத்த மழையாலும், நிரம்பி வழிந்த ஏரியாலும், சென்னையின் பல்வேறு பகுதிகளை மழைநீர் சூழ்ந்தது. கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு தொடங்கி திங்கட்கிழமை இரவு வரை, கிட்டத்தட்ட 24 மணி நேரத்தில், 73 செ.மீ. மழை கொட்டித் தீர்த்தது. 3 மாதங்களில் பெய்யக்கூடிய மழை ஒரே நாளில், வரலாற்றில் கேள்விப்படாத வகையில் பெய்து, சென்னை மக்களை நிலை குலைய வைத்துள்ளது. மழை நின்று 40 மணி நேரத்தை கடந்தும், இன்றும் பல பகுதிகளில் மழைநீர் தேங்கி நிற்கிறது.

பெருநகரின் பல பகுதிகள் தனித்தனி தீவுபோல் காட்சி அளிக்கின்றன. உண்ண உணவு, குடிக்க தண்ணீர் இல்லாத நிலை. மின்சாரம், தொலை தொடர்பு என எந்த சேவையும் இன்றி மக்கள் தவிக்கின்றனர். இன்று 5வது நாளாக பல இடங்கள் தண்ணீரில் தத்தளிக்கின்றன. செல்போன்களில் சிக்னல் கிடைக்காத காரணத்தால், யாருடனும் தொடர்பு கொள்ள முடியாத நிலை. தலைநகர் சென்னையில், கடந்த 2015ம் ஆண்டு ஏற்பட்ட இயற்கை பேரழிவை தொடர்ந்து, தற்போது இரண்டாவது பெரிய பேரழிவு ஏற்பட்டுள்ளது. இது, 100 ஆண்டுகளில் இல்லாத அளவு ஏற்பட்ட மிகப் பெரிய இயற்கை பேரழிவு ஆகும்.


தினகரன்
டிசம்பர் 8, 2023 வெள்ளிக்கிழமை
நீளும் உதவிக்கரம்
வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மிக்ஜாம் புயலாக மாறியது. அதைத்தொடர்ந்து வந்த பலத்த மழையாலும், நிரம்பி வழிந்த ஏரியாலும், சென்னையின் பல்வேறு பகுதிகளை மழைநீர் சூழ்ந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தொடங்கி திங்கட்கிழமை இரவு வரை, கிட்டத்தட்ட 24 மணி நேரத்தில், 73 செ.மீ. மழை கொட்டித் தீர்த்தது. 3 மாதங்களில் பெய்யக்கூடிய மழை ஒரே நாளில், வரலாற்றில் கேள்விப்படாத வகையில் பெய்து, சென்னை மக்களை நிலை குலைய வைத்துள்ளது. மழை நின்று 40 மணி நேரத்தை கடந்தும், இன்றும் பல பகுதிகளில் மழைநீர் தேங்கி நிற்கிறது. பெருநகரின் பல பகுதிகள் தனித்தனி தீவுபோல் காட்சி அளிக்கின்றன. உண்ண உணவு, குடிக்க தண்ணீர் இல்லாத நிலை. மின்சாரம், தொலைதொடர்பு என எந்த சேவையும் இன்றி மக்கள் தவிக்கின்றனர். இன்று 5-வது நாளாக பல இடங்கள் தண்ணீரில் தத்தளிக்கின்றன. செல்போன்களில் சிக்னல் கிடைக்காத காரணத்தால், யாருடனும் தொடர்புகொள்ள

முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த இரு தினங்களாக, களத்தில் இறங்கி, மழை வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று நிவாரண உதவிகளை வழங்கி வருகிறார். மிக்ஜாம் புயல் பாதிப்பில் இருந்து சென்னையை மீட்டெடுக்க ஒன்றிய அரசு ரூ.5060 கோடி நிவாரண நிதி வழங்க வேண்டும் என முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார். பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். அதன் எதிரொலியாக, ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று சென்னை வந்து, ஹெலிகாப்டர் மூலம் மழை பாதிப்பு பகுதிகளை நேரில் ஆய்வு செய்துள்ளார்.

இந்நிலையில், தமிழகத்தில் நிவாரண பணிகளை மேற்கொள்ள, ரூ.450 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, ஒன்றிய அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், சென்னை வெள்ள மேலாண்மை திட்டத்துக்காக ரூ.561.29 கோடி ஒதுக்கியுள்ளது. இவை, யானைப் பசிக்கு சோளப்பொறி போல் உள்ளது. எனவே, ஒன்றிய அரசை எதிர்பாராமல், மக்கள் மனமுவந்து உதவிக்கரம் நீட்ட வேண்டும் என முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதை ஏற்று, தமிழகத்தில், ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் நிவாரண பொருட்கள் லாரி, லாரியாக சென்னையை நோக்கி பயணித்தவண்ணம் உள்ளன.

கடைசியாக உருவாக்கப்பட்ட தமிழகத்தின் 38வது மாவட்டமான, மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்தும் நிவாரண பொருட்கள் லாரிகளில் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உதவிக்கரம் நீட்டுவதில் தமிழர்கள் சளைத்தவர்கள் அல்ல, என்பதை தமிழக மக்கள் மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளனர். ஏற்கனவே, 2008ல் நிஷா புயல், 2010ல் ஜல் புயல், 2011ல் தானே புயல், 2012ல் நீலம் புயல், 2013ல் மடி புயல், 2016ல் வர்தா புயல், 2017ல் ஒக்கி புயல், 2018ல் கஜா புயல் என தமிழகத்தை புரட்டிப்போட்ட பல புயல்களின்போதும், நிவாரணம் வழங்க தமிழக மக்கள் தவறியது இல்லை.

அதுபோல் தற்போதும் மிக்ஜாம் புயலின் கோரத் தாண்டவத்தில் சிக்கிய சென்னை மக்களை மீட்க, உதவிக்கரம் நீட்டி வருவது பெரும் மகிழ்வை தருகிறது. ஒன்றிய அரசின் நிவாரண நிதி வருகிறதோ இல்லையோ, தமிழகத்தின் மூலை முடுக்கில் இருந்தெல்லாம் மக்கள் உதவ துவங்கியுள்ளனர். இது, சென்னை மக்களுக்கு பெரும் ஆறுதலாக உள்ளது. இந்த உதவிக்கரம் இன்னும் நீண்டால், சென்னை மிக விரைவில் மீளும் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்:

# தொண்டு நிறுவனங்கள் கவனத்திற்கு!

## வாட்ஸ் அப் எண் 73977 66651-ல் தொடர்பு கொள்வீர்!

சென்னை, டிச. 9-

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவுள்ள தொண்டு நிறுவனங்கள் 7397766651 என்ற வாட்ஸ் அப் எண்ணில் தொடர்புக் கொள்ள அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

“மிக்ஜாம்” புயலால் முன் எப்போதும் இல்லாத வகையில் இடைவிடாது பெய்த அதிகன மழையின் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து பாதிப்புக்குள்ளானது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பொதுமக்கள் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.

மழை வெள்ளத்தால் பாதிப்பிற்குள்ளான குடும்பங்களுக்கு உணவு, உடை உள்ளிட்ட பல்வேறு நிவாரணப் பொருட்கள் வழங்க பல்வேறு தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இவ்வாறு தொண்டு நிறுவனங்கள் மூலம் வரப்பெறும் நிவாரணப் பொருட்களை தேவைப்படும் பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதற்கான உரிய ஏற்பாடுகளை செய்ய இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, ‘மிக்ஜாம்’ புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்க விரும்பும் தொண்டு நிறுவனங்கள் 7397766651 என்ற வாட்ஸ் அப் எண்ணில் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட இந்திரா நகர், எம்.டி.பி. கம்யூனிட்டி ஹால் முன்பாக செல்லும் சாலை, பைத்துல்மால் நகர், சி.டி.எம்.புரம் பொட்டல்விளை செல்லும் குறுக்கு தெரு மற்றும் இல்லத்தார் தெரு ஆகிய பகுதிகளில் ரூ. 45.50 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளை மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மாநகராட்சி இளநிலை பொறியாளர் திருமதி. தேவி, மண்டல தலைவர்கள் ஜவகர், திருமதி. அகஸ்டினா கோகிலவாணி, செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் அமல செல்வன், திருமதி. மோனிகா, திருமதி. பாத்திமா ரிஸ்வானா, சுப்பிரமணியன், ஸ்டாலின் பிரகாஷ், ஜெயவிக்ரமன், திருமதி. கலாராணி, மாநகராட்சி தொழில்நுட்ப அதிகாரிரவி, நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், செயற்குழு உறுப்பினர் சதாசிவன், பகுதி செயலாளர்கள் ஷேக்மீரான், துரை, ஜீவா, அணிகளின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை திருவொற்றியூர் பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் பணியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆகியோர் தலைமையில் நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிவாரணப்பணியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு மற்றும் கழக நிர்வாகிகளுடன் திருவொற்றியூர் பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## அமைச்சர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் - அரசு அலுவலர்கள் - கழக நிர்வாகிகள் தீவிரம்!

# புயல் வெள்ளம்: உறக்கமின்றி பணியாற்றி மக்கள் துயர் நீக்கும் கழக அரசு!



நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் சோழிங்கநல்லூர் மண்டலம். நூக்கம்பாளையம் லிங்க் சாலையில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். அதுபோது முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மண்டல கண்காணிப்பு அலுவலர் வீரராகவ ராவ், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், மண்டலக் குழுத் தலைவர் மதியழகன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னையில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு பகுதி பொதுமக்களுக்கு நேற்று முன்தினம் (07.12.2023) தோட்டக்கலை துறையின் சார்பில் நடமாடும் வாகனங்கள் மூலம் மலிவு விலையில் காய்கறிகள் விற்பனையை வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார். இந்த நிகழ்வின்போது வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தாதேவி மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் வயலூர் கிராமத்தில் வசிக்கும் கன மழையால் பாதிக்கப்பட்ட நரிக்குறவர்களுக்கு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் அமைச்சர் சு.முத்துசாமி அரிசி, போர்வை உள்ளிட்ட நல உதவிகள் வழங்கினார். உடன் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., ஒன்றியக் கழகச் செயலாளர் கெ.ஞானசேகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூர் கழக செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் பி.சசிகுமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் உத்தரமேரூர் கே.தயாளன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் துணை அமைப்பாளர் விசூர் ஊராட்சி மன்ற தலைவர் மூர்த்தி, ஒன்றிய கழக அவை தலைவர் தா.சுப்பராயன், ஒன்றிய கழகத் துணைச் செயலாளர் சுகுணா சுந்தர்ராஜன், சிவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (07.12.2023) மிக்ஜாம் புயல் பாதித்த பகுதிகளான சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திடீர் நகர், கோதாமேடு போன்ற பகுதிகளில் 5000 குடும்பங்களுக்கு மேலாக பால் விநியோகம் செய்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் இருந்தனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (7.12.2023) சென்னை, வால்டாக்ஸ் சாலை மூலக் கொத்தளம், காவலர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மழை நீர் வெளியேற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, நேற்று முன்தினம் (07.12.2023) மணலி மண்டலம், எஸ்.ஆர்.எஸ். லிமிடெட் நிறுவனத்தில் மிக்ஜாம் புயல் நிவாரணப் பணிகளுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சமையல் கூடம் மற்றும் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு வழங்கப்படவுள்ள நிவாரணப் பொருட்களைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, நிவாரணப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர்/மிக்ஜாம் புயல் மீட்புப் பணி சிறப்பு அலுவலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, சிவகுரு பிரபாகரன், மண்டலக் குழுத் தலைவர் ஏ.வி.ஆறுமுகம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



“மிக்ஜாம் புயல்” காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தங்குதடையின்றி காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்கள் கிடைக்கும் வகையில் கூட்டுறவுத்துறையின் மூலம் சென்னை, தேனாம்பேட்டை காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடியிலிருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு காய்கறிகள் மற்றும் மளிகைப்பொருட்களை விற்பனை செய்ய செல்லவுள்ள நகரும் காய்கறி மற்றும் மளிகைப்பொருட்கள் விற்பனை வாகனத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (07.12.2023) ஆய்வு செய்து அனுப்பி வைத்தார். உடன் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன் ஆகியோர் உள்ளனர்.



மிக்ஜாம் புயல் கனமழை பாதிப்பு மீட்பு பணியில் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 53வது வார்டு கண்ணன் தெரு, மின்ட் ரவுண்டானா பகுதியில் மழைநீர் பாதிப்புக் குறித்து அமைச்சர் ராஜகண்ணப்பன், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுசெய்து, நிவாரண உதவிகள் வழங்கினர். உடன் அரசு அதிகாரி விஜயகார்த்திகேயன், இராயபுரம் பகுதி செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், அரசு உயர் அதிகாரிகள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் இருந்தனர்.




திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட ஆர்.கே.பேட்டை எஸ்.வி.ஜி.புரம் பகுதியில் மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியமான நிவாரணப் பொருட்களை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. உள்பட ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டம், பூண்டி மற்றும் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நிவாரண உதவிகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ. கோவிந்தராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ராஜ்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மரு.என்.ஒ.சுகபுத்திரா, மாவட்ட துணைச் செயலாளர் டாக்டர் வி.சி.ஆர். குமரன், உட்பட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை 2023-2024 ஆம் ஆண்டிற்கான அரவையை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவங்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல். ஏ, , சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ. புஷ்பராஜ், மாவட்ட கவுன்சிலர் பி. வி. ஆர். விஸ்வநாதன், ஆலை. தனி அலுவலர் முத்து மீனாட்சி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், குன்னூர், எடப்பள்ளி ஊராட்சியில் புதிய தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியகூறுகள் உள்ள இடங்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார் உட்பட பலர் உள்ளனர்.

### கல்வராயன் மலைகள் - ஏற்காடு மலைகள் பகுதிகளில்

# சாலை இணைப்பு வசதிகளை முழுமையாக ஏற்படுத்தாதது ஏன்?

## நாடாளுமன்றத்தில் - கள்ளக்குறிச்சி தொகுதி கழக எம்.பி., டாக்டர் பொன்.கௌதம சிகாமணி கேள்வி!

புதுடெல்லி, டிச. 9 -

நாடாளுமன்றத்தில் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி "எனது நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கல்வராயன் மலைகள் மற்றும் ஏற்காடு மலைகள் பகுதியில் சாலை இணைப்பு வசதிகளை முழுமையாக ஏற்படுத்தாதது ஏன்?" என்று கேள்வி எழுப்பினார்.

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி நாடாளுமன்ற கூட்டுத் தொடரில் கேள்வி நேரத்தில் பேசியதாவது.

கிராமப்புற வளர்ச்சிக்கான மாநில அமைச்சர் அளித்த பதிலில், PMGSY திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள பெரும்பாலான பணிகள் சில மாநிலங்களிலும், மலைப்பாங்கான மாநிலங்களிலும் நிலுவையில் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமப்புற மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் சாலை இணைப்பை ஏற்படுத்துவதே PMGSY திட்டத்தின் நோக்கமாகும். கல்வராயன்மலைகள் மற்றும் ஏற்காடு மலைகள் எனது கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியில் வருகின்றன. இதற்கு சிறந்த சாலை இணைப்பு வசதிகள் தேவைப்படுகிறது.

எனவே, பல நீட்டிப்புகள் இருந்தபோதிலும் பணிகள் இன்னும் நிலுவையில் உள்ளன. மாநிலங்களில் சாலை திட்டங்களை முடிக்க இடையூறுகளை அகற்ற அரசாங்கம் எடுக்க முன்மொழிந்த நடவடிக்கைகள் என்னென்ன?

சாலை பணிகள் நிலுவையில் இல்லாத நிலையில், பல மாநிலங்கள் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் குறிப்பாக தமிழ்நாடு மாநிலத்தால் கூடுதல் நிதி மற்றும் சாலைகளுக்கு ஒப்புதல் கோரி வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் வேறுபாடு உள்ளது என்பதை நான் கவனத்துக்கு கொண்டு வருகிறேன், அது ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். எனவே, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சமமாக சாலை திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும் நிதி வழங்கவும் அரசு பரிசீலித்து வருகிறதா என்பதை அமைச்சரிடம் நான் அறிய விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

# உயர்த்திய சுங்கக் கட்டணத்தை உடனே குறைத்திடுவீர்!

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.9 -

உயர்த்திய சுங்க கட்டணத்தை உடனடியாக குறைக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேலாக சுங்ககட்டணம் வசூலிக்கும் சுங்க சாவடிகளை மூட வேண்டும் என்றும், இரா.கிரிராஜன் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

அவர் பேசியதாவது:-

சுங்கசாவடியில் சுங்க கட்டணம் தொடர்ந்து உயர்த்தப்படுவது துரதிஷ்டவசமானது. இது நாடு முழுவதும் அத்தியாவசிய பொருட்களின் குறிப்பாக உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு வழிவகுக்கும்.

பெட்ரோல், டீசலுக்கு எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயிக்கும் விலையை தவிர, உள்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணமாக பெட்ரோல் மற்றும் டீசலுக்கு முறையே லிட்டருக்கு ரூ.5 முதல் ரூ.2 வரை மத்திய அரசு வசூலிக்கிறது.

2021-2022-ஆம் ஆண்டில் மட்டும் நாடு முழுவதும் 3,08,49,000 மெட்ரிக் டன் பெட்ரோல் மற்றும் 7,66,59,000 மெட்ரிக் டன் டீசல் விற்பனை செய்யப்பட்டு உள்கட்டமைப்பு, மேம்பாட்டு நிதியாக ரூ. 2,70,000 கோடி வசூலிக்கப் பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் ரூ. 20 லட்சம் கோடி சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக வசூலிக்கபட்ட பிறகு சுங்கசாவடியில் அதிக கட்டணம் வசூலிப்பது நியாயமற்றது. சாலை அமைப்பதற்கான காலக்கெடுவிற்கு பிறகு 40 சதவிகித கட்டணத்தை மட்டுமே வசூலிக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

10 ஆண்டுகளுக்கு மேலாக பல சுங்கசாவடிகளில் முழு சுங்கக் கட்டணம் வசூலிக்கப் பட்டு வருகிறது. பஸ், லாரி, சரக்கு வாகனம், கால் டாக்சி, சுற்றுலா வாகனங்கள் போன்ற வணிக வாகனங்களுக்கான சுங்க கட்டண உயர்வை மக்களே ஏற்றுக் கொள்கிறார்கள்.

சுங்க கட்டணத்தை அடிக்கடி உயர்த்தினால் அது தானாகவே சில்லறை விலையை திகரித்து இறுதியில். இதுவே விலைவாசி உயர்வுக்கு மூலகாரணமாகி எளிய சாமானிய பொதுமக்களை பாதிக்கும்.

ஆகவே நாடு முழுவதும் அனைத்து சுங்கசாவடிகளிலும் உயர்த்தப்பட்ட சுங்க கட்டணத்தை திரும்ப பெற வேண்டும். தமிழகத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சுங்க கட்டணம் வசூலிக்கும் அனைத்து சுங்கச்சாவடிகளையும் மூட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா !

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தொண்டர் அணி சார்பில் கருத்தரங்கம்!

## திருச்சி என்.சிவா எம்.பி. - கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச. 9 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், தி.மு.க. மாவட்டத் தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்

30.11.2023 வியாழன் அன்று காலை 10.00 மணியளவில் கே.வி.எஸ் மஹால் ஏசி (பட்டுக்கோட்டை ரோடு) அறந்தாங்கியில்

கலைஞரின் தொலைநோக்கு பார்வை என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் மு. கருணாகரன் வரவேற்புரையாற்றினார்.

சட்டம், நீதிமன்றங்கள் சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமை வகித்தார்.

கலைஞரின் தொலைநோக்கு பார்வை என்ற தலைப்பில் மாநிலங்களவை குழுத் தலைவர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், கழக இலக்கிய அணி துணைத் தலைவருமான கவிச்சுடர் கவிதைபித்தன், கழக தொண்டர் அணி துணைச் செயலாளர் சுப.சரவணன். மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, க.அடைக்கலம், மாவட்ட பொருளாளர் ஜெ.அபு தாகீர், அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் உதயம் சண்முகம், வே.பொன்துரை, டி.தங்கமணி. பொன்.கணேசன், அரு.வடிவேல், எஸ்.எம். முகமது அப்துல்லா. அ. முத்து, எஸ்.குமார் (எ) துரைக்கண்ணு, ஏ.ஆர். அழகு சிதம்பரம். பொன். ராமலிங்கம், கே.சி.சிவக்குமார், ஏ.பழனி குமார், தலைமைச்செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே. கலைமணி, இரா.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.வி.செல்வம், சீனி. பழனியப்பன், என். வீரையா, ரெத்தினவேல், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் த.மணிராஜன், சிவ.பால. இளங்கோ, தி.முத்து, டாக்டர் சுதர்சன், இ.ஏ.பெரிய கருப்பன், ஏ. பாத்திமா பீவி, கே.ஆர்.இராமசாமி, ஹரி விமலாவதி, எம்.ஜி (எ) ராமச்சந்திரன், டி. வளர்மதி, மேகநாதன், சக்திவேல், எம்.தேவி, ஒன்றியப் பெருந்தலைவர்கள் மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து மற்றும் ஆலங்குடி செல்வராஜ்,

சாமி.சுரேஷ், எஸ். காளீஸ்வரன், ராஜ சரவணன், என்,ராஜா, நா.சரவணன். கே.நாகராஜன், கே.வி.மயில்வாகனன், டி. வி.சாத்தையா, ந.செ.முத்தையா. ரமேஷ். சு.சத்தியசீலன், செல்லத்துரை, இரா. தமிழ்ராசு, நசுருதீன், கண்ணன், த.பழனியபபன், க. செ.த.தென்னரசு, ஆலவயல் முரளி சுப்பையா மணிமொழியன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சோ.ஆறுமுகம் நன்றி கூறினார்.




தருமபுரி கிழக்கு மாவட்டம்,ஏரியூர் ஒன்றியம் பெரும்பாலையில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணியின் ஆலோசனைப்படி ஏரியூர் ஒன்றியச் செயலாளர் என்.செல்வராஜ் தலைமையில் 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கம் சார்பாக பொதுமக்கள், மாணவ, மாணவிகளிடம் கையெழுத்து பெறப்பட்டது. உடன் பொதுக்குழு உறுப்பினர் சோலை மணி, கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன், துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் அசோக்குமார், கார்த்திக், வர்த்தகர் அணி அமைப்பாளர் பி.கே.துரைசாமி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. சட்டத்துறை சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா"வினையொட்டி

# இளம் வழக்கறிஞர்களுக்கான 6வது மண்டல பேச்சுப் போட்டி!

## தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை!

சென்னை, டிச. 9 -

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில்,சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சு போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப் பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமேநடத்தப் படும்.

**போட்டிக்கான தலைப்பு**

கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி - இளம் வழக்கறிஞர்கள் மேற்சொன்ன இந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிடவேண்டும். மாநிலம் முழுதும் உள்ள சட்ட கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் 5 மண்டலங்களில் பேச்சுப் போட்டி நடை பெற்று முடிந்ததைத் தொடர்ந்து, தற்போது 6 வது மண்டலப் பேச்சுபோட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின் படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசு ரூபாய் 50,000/- தங்கப் பதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 25,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு - ரூபாய் 15,000/-தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/- வெண்கலப்பதக்கம், சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" நீலாங்கரை, "ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும். அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப் படும்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/- தங்கபதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு - ரூபாய் 50,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/- தாமிரப்பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு - ரூபாய் 10,000/-வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

**பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்!**

கே.எஸ்.இரவிச்சந்திரன் (சட்டத்துறை இணைச் செயலாளர் 98400-22250), ஜெ.பச்சையப்பன் ( சட்டத் துறை துணைச் செயலாளர்-98402-60178), கே.சந்துரு சட்டத் துறை துணைச் செயலாளர் 94440-06999), கே.ஜே. சரவணன் (தலைமைக் கழக வழக்கறிஞர் - 98410-57345)

**6 வது மண்டல பேச்சுப் போட்டி**

9.12.2023 - காலை 9.00 மணி, திருவாரூர், "கலைஞர் கோட்டம்" (வழக்கறிஞர்கள்),

போட்டியின் நடுவர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான், வழக்கறிஞர் நன்மாறன்

திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், திருவண்ணா மலை, நீலகிரி, ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்காலைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள் பங்கு பெறும் தகுதியுடையவர்கள் ஆவர்.

இவ்வாறு சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அறிவித்துள்ளார்.

# ரூ.83.45 லட்சத்தில் புதிய மருத்துவ கட்டடப் பணிகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, டிச. 9 -

மேல்மலையனூர் ஒன்றியத்தில் 83.45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்புதிய மருத்துவ கட்டிடம் கட்டுவதற்கும், குளம் புனரமைக்கும் பணிக்கு நரிக்குறவர் பெண்கள், திருநங்கைகளை முன்னிலைப்படுத்தி அமைச்சர் செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி வட்டார ஆரம்ப சுகாதார நிலை யத்தில்15 வது நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் 54.75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய வட்டார பொது சுகாதார பிரிவு கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதிய வட்டார பொது சுகாதார பிரிவு கட்டிடம் கட்டுவதற்கு பணியினை தொடங்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து இந்து சமய அறநிலைத் துறை சார்பில் மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவில் அருகில் 28.70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மயானக் குளம்புனரமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நரிக்குறவர் பெண்கள் மற்றும் திருநங்கைகளை முன்னிலை ப் படுத்தி பணிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், உதவி ஆணையர் ஜீவானந்தம், வட்டாட்சியர் முகமது அலி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள்குலோத்துங்கன், சரவணகுமார்,வட்டார மருத்துவ அலுவலர் வெங்கடேசன்,ஒன்றிய கவுன்சிலர்கள் யசோதை சந்திரகுப்தன், ரவிச்சந்திரன், ராஜா, லட்சுமி கணபதி, ஜெயலட்சுமி தஷ்ணாமூர்த்தி,ஆவின் இயக்குனர் ஆறுமுகம், ஒன்றிய நிர்வாகிகள் மண்ண ஏழுமலை, உதயகுமார், அரிதாஸ், ரகுராமன், வெங்கடேசன், செந்தில்குமார், ஜி. பி. எஸ். முருகன், எஸ்.பி. சம்பத், தேசிங்கு, செல்வம், டி.பி. ஏழுமலை,குமார், தாஹிரா பானு, ஊராட்சி மன்ற தலைவர்கள் வளத்தி விஜயலட்சுமி ஜெயக்குமார், கெங்கபுரம் ராஜா,உதவி பொறியாளர் நாராயணசாமி, மேல்மலையனூர் அங்காளம்மன் கோவில் அறங்காவலர்கள்நிர்வாகிகள் தேவராஜ், ராமலிங்கம்,செல்வம், சரவணன், வடிவேல், சந்தானம்,தமிழ்நாடு இந்து திருக்கோவில் கூட்டமைப்பின் விழுப்புரம் மாவட்ட தலைவர் பாபு,விழுப்புரம் மாவட்ட அறங்காவலர் குழுஇயக்குனர் சத்யா சரவணன் மேலாளர் மணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக் கழக பார்வையாளர்கள் அக்ரி கே.பி.டி.கணேசன், இரா.சங்கர், சி.வீரகணேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., து.செல்வம், எம்.இராமசந்திரன், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, மாநில நிர்வாகி சி.இறைவன், மாநகரக் கழகச் செயலாளர் இராமநாதன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் அ.புண்ணியமூர்த்தி, கனகவள்ளி பாலாஜி ஆகியோர் உள்ளனர்.



அண்ணல் அம்பேத்கரின் 67வது நினைவு நாளையொட்டி பரமக்குடி சட்டமன்ற அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப்படத்திற்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் மலர் தூவி மரியாதை செய்தார். உடன் பரமக்குடி நகர்மன்ற தலைவர் சேது கருணாநிதி, நயினார் கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாமலை, நகர் மன்ற உறுப்பினர் பிரபா சாலமன், வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செய்தனர்.

# இந்தியா கூட்டணி ; இந்தியாவை திராவிடப் பண்பாட்டு நாடாக்க வேண்டும்!!

ராஜன் குறை கிருஷ்ணன்
பேராசிரியர்
அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.



**நா**ன்கு மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. தெலங்கானாவில் ஆளுகின்ற பாரதிய ராஷ்டிரிய சமிதியை தோற்கடித்து காங்கிரஸ் ஆட்சியை பிடித்துள்ளது. மற்ற மூன்று வட மாநிலங்களான மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்திஸ்கர் ஆகியவற்றில் பா.ஜ.க. வென்றுள்ளது. இது பா.ஜ.க.விற்கு பெரும் வெற்றியாகவும், காங்கிரஸிற்கு பெரும் சரிவாகவும் பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் இந்த மாநிலங்களின் பங்கு என்ன? பா.ஜ.க. வெற்றிக்கு அவை உத்திரவாதமளிக்குமா என்பதெல்லாம் விவாதிக்கப் படுகின்றன. மத்தியப் பிரதேசத்தின் மக்கள் தொகை ஏழேகால் கோடி. மக்களவை இருக்கைகள் 29. ராஜஸ்தான் மக்கள் தொகை ஆறே முக்கால் கோடி. மக்களவை இருக்கைகள் 25. சத்திஸ்கர் மக்கள் தொகை இரண்டரை கோடி. மக்களவை இருக்கைகள் 11. தெலங்கானாவின் மக்கள் தொகை மூன்றரை கோடி. மக்களவை இருக்கைகள் 17. சேர்த்துச் சொன்னால் மொத்தம் 65 மக்களவை இருக்கைகள் கொண்ட வட மாநிலங்களில் பாஜக வெற்றி பெற்றுள்ளது. 17 மக்களவை இருக்கைகள் கொண்ட தெலங்கானாவில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

ஏற்கனவே குஜராத், உத்திரப்பிரதேசம், அஸ்ஸாம் ஆகிய மூன்று பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் 120 மக்களவை தொகுதிகள் உள்ளன. ஹரியானா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் கூட்டணி ஆட்சியில் பா.ஜ.க. இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில், இந்த மூன்று பெரிய மாநிலங்களிலும் வென்றதால் பா.ஜ.க. மக்களவையில் பெரும்பான்மை தொகுதிகளை வெல்வதற்கு சாத்தியங்கள் அதிகரிப்பதாக கூறலாம். சற்றேறக்குறைய 250 மக்களவை தொகுதிகள் கொண்ட மாநிலங்களில் பா.ஜ.க. தனியாகவோ, கூட்டணியிலோ ஆட்சி செய்கிறது எனலாம். ஆனால் தென் மாநிலங்கள் எதிலும் பா.ஜ.க. ஆட்சியில் இல்லை என்பதுடன், தெலங்கானாவில் பி.ஆர்.எஸ்சிற்கு எதிரான அதிருப்தி அலையை தங்களுக்கு சாதகமாக பாஜகவால் பயன்படுத்த முடியவில்லை. காங்கிரஸ் அங்கே வென்றுள்ளது.



மேற்கு வங்கம், பீகார், பஞ்சாப், டெல்லி, உத்திராகண்ட், ஜார்கண்ட், ஒரிசா ஆகிய முக்கிய மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சி செய்யவில்லை. மகாராஷ்டிராவில் மிகப்பெரிய அரசியல் குழப்பத்தை அரங்கேற்றியே ஆட்சியில் பா.ஜ.க. ஒட்டிக்கொண்டுள்ளது. எதிர்க்கட்சிகள் இரண்டை பிளந்து அதில் குளிர் காய்கிறது. நீதிமன்றத்தில் வழக்குகள் உள்ளன. நீதிமன்றம் என்ன சொன்னாலும், மக்கள் மன்றம் என்ன கூறப்போகிறது என்பதே முக்கியம். பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களில் எல்லாம் மக்களவை தேர்தலில் அது பெருவாரியான தொகுதிகளை கைப்பற்றும் என்பது உத்திரவாதமில்லை. உ.பி, ம.பி, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் மாநில தேர்தலில் ஒரு கட்சிக்கும், மக்களவைத் தேர்தலில் மற்ற கட்சிக்கும் வாக்களிப்பதைப் பார்த்துள்ளோம். மேலும் ராஜஸ்தான், சத்திஸ்கர், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் கணிசமான வாக்குகளை பெற்றுள்ளது. கணிசமான தொகுதிகளையும் வென்றுள்ளது. வலுவான கட்சியாகவே தேர்தல் களத்தில் நின்றுள்ளது.



எனவே 2024 மக்களவை தேர்தல் களம் நிச்சயம் கடும் போட்டிக்கான களமாகவே உள்ளது எனலாம். இந்தியா கூட்டணி தங்கள் தரப்பை மக்களிடம் எடுத்துச் செல்வதில் முனைப்புடன் இயங்கினால் வெற்றி நிச்சயம். பா.ஜ.க. எந்த விதத்திலும் அசைக்க முடியாத பலத்துடன் மக்கள் மன்றத்தில் விளங்கவில்லை. பா.ஜ.க. அதிகாரங்களை ஒன்றிய அரசில் குவித்துக்கொள்ளும் பாசிச முனைப்புடன் இருக்கலாம். ஆனால் மக்களின் ஆதரவைக் குவிப்பதில் அது நிச்சயம் வெற்றி பெறவில்லை. எல்லா மாநிலங்களிலுமே அதற்கு கணிசமான எதிர்ப்பு உள்ளது. அதிக வாக்குகள் எண்ணிக்கை அடிப்படையில் தான் வெல்கிறதே தவிர மக்களின் ஏகோபித்த ஆதரவால் இல்லை. இந்துத்துவமோ, மோடி அலையோ அதற்கு தானாக வெற்றியை பெற்று தரும் என்று கருத வாய்ப்பே இல்லை. மாநிலத்திற்கு மாநிலம் கடுமையாகப் போராடியே அது மக்களவை தேர்தலில் வெல்ல முடியும். மாநிலங்களின் தனித்துவம் தேர்தல் வெற்றி தோல்விக்கான காரணங்களை விவா திப்பது, அலசுவது, ஆராய்வது என்பது சமூகத்திலும், ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் மிகப் பரவலாக நடக்கிறது. அது இயல்பானது தான். ஆனால் இந்த விவாதங்களில், அலசல்களில் பரவலாக காணக்கூடிய பலவீனம் அவரவர் முன்னிலைப் படுத்தும் அம்சத்தை ஒற்றை காரணமாகவோ, முக்கிய காரணமாகவோ, பொதுக் காரணமாகவோ முன்வைப்பது தான். எல்லா மாநிலங்களுக்கும் பொதுவான காரணங்கள் என்று எதுவும் கிடையாது என்றே சொல்லலாம். மத்தியப்பிரதேசத்தில் மோடி அலை வீசியதென்றால், தெலங்கானாவில் ஏன் வீசவில்லை? தலை நகர் டெல்லியிலேயே வீசவில்லையே?

**இந்துத்துவத்திற்கு ஆதரவு பெருகிவிட்டது என்றால் அது ஏன் உத்திரப் பிரதேசத்தைக் கடந்து பீகாருக்குள் நுழைய முடியவில்லை? வங்காளிகள் எல்லாம் இந்துக்கள் இல்லையா? ஒடியாவில் இந்துக்கள் இல்லையா? அங்கேதானே பூரி ஜெகன்னாதர் கோயில் இருக்கிறது? ஒவ்வொரு மாநில அரசியலும் அந்த மாநில அளவிலேயே தீர்மானிக்கப்படுகிறது. அதையும் கடந்து மாநி லத்திற்குள் உள்ள பல்வேறு பிரதேசங்கள் அடிப்படையிலும், ஏன் தொகுதி அடிப்படையிலும் கூட தீர்மானிக்கப்படுகிறது.**



எனவே மத்தியப் பிரதேசத்தில் காங்கிரசின் தோல்விக்கான காரணங்கள் வேறு; அது சிவராஜ் சிங் சௌஹானின் பா.ஜ.க. அரசு பெண்களுக்கான மாதாந்திர உரிமைத்தொகையை(தமிழ்நாட்டுபெயர்)வழங்கியதாகக் கூட இருக்கலாம். ராஜஸ்தானில் 2% வாக்கு வித்தியாசத்தில் அசோக் சிங் கெலாட் தோற்றதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். அவற்றில் எந்த காரணம் பிரதான காரணம் என்பதை கண்டறிவதற்கு பெரிய அளவில் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும். காரணங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுவது மட்டுமல்லாமல், தருணத்திற்கு தருணம் மாறுபடுவது மாகும். வாக்குப் பதிவுக்கு முந்தைய நாள் நிகழ்ந்த ஒரு சம்பவம் கூட கணிசமான வாக்காளர்களின் தேர்வை பாதிக்கலாம்.

**சென்ற 2019 நாடாளுமன்ற தேர்தலின் போது புல்வாமா என்ற இடத்தில் நிகழ்ந்த தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு பா.ஜ.க. அரசின் கவனமின்மையே காரணம் என்று பிரசாரம் செய்வதற்குப் பதிலாக, பா.ஜ.க. அதனை தேசபக்தி முழக்கமாக மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்பட்டதை பார்த்தோம். அது தேர்தலில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் என்றே தோன்றுகிறது. பல ஆய்வாளர்களும் அப்படியே கூறுகிறார்கள். இது போன்ற தாற்காலிக நிகழ்வுகள் ஏற்படுத்தும் தாக்கங்கள், உள்ளூர், பிரதேச நிலவரங்கள் என பல்வேறு காரணங்களின் தொகுப்பாகத்தான் தேர்தல் வெற்றி தோல்விகள் அமைகின்றன. அதில் கருத்தியல், பிரசாரம், தலைவர்களின் ஆளுமை, வேட்பாளர்களின் ஆளுமை என பல்வேறு அம்சங்களும் இடம் பெறத்தான் செய்கின்றன. எல்லாவற்றையும் நாம் கவனமாக பரிசீலிக்கும்போது காங்கிரஸ் இன்னமும் பல வட மாநிலங்களில் வலுவாகத்தான் இருக்கிறது என்பதை கருத்தில் கொள்ளத்தான் வேண்டும்.**

**வட மாநிலங்களும், தென் மாநிலங்களும் தெலுங்கானாவில் காங்கிரஸ் வெற்றி பெற்றதன் காரணமாக வட மாநிலங்களுக்கும், தென் மாநிலங்களுக்கும் சாராம்சமான பல வேறுபாடுகள் கற்பிக்கப்படுகின்றன. இதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். "இந்து, இந்தி, இந்தியா" என்ற புகழ் பெற்ற வலதுசாரி முழக்கத்தில் இந்தி என்ற மொழி சார்ந்த அம்சத்தில் தான் வடக்கிற்கும், தெற்கிற்கும் முக்கிய வேறுபாடு நிலவுகிறது. ஏனெனில் வட இந்தியாவில் சமஸ்கிருதமயமான இந்தி மொழி கட்டமைக்கப் பட்டதற்கும், இந்து அடையாளம் கட்டமைக்கப்பட்டதற்குமான வரலாற்று இணையுறவு முக்கியமானது. இந்துஸ்தானியிலிருந்து உருது மொழியை பிரித்தெடுத்து அதை முஸ்லீம்கள் மொழியாகக் கட்டமைத்து, சமஸ்கிருதவயப்பட்ட இந்தியை நாகரி எழுத்தில் எழுதி அதை தேவ நாகரி என்று அழைத்து அதன் மூலம் இந்து அடையாளத்தையும் மொழி சார்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உருவாக்கினர்.** ஆனால் தலித் மக்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், முன்னேறிய வகுப்பினர் ஆகியோருக்கு இடையேயுள்ள பாகுபாடும், ஏற்றத்தாழ்வும் வட இந்திய சமூகங்களில் வலுவாக உள்ளதுடன், தொடர்ந்து அரசியல் அணியாக்கத்திற்கும் வலு சேர்க்கின்றன. அதனால் வட இந்தியாவில் "இந்திஇந்து" அரசியல் மந்திர் அரசியலாகவும், சமூக நீதி அரசியல் மண்டல் அரசியலாகவும் எண்பதுகளின் இறுதியில் பரிணமித்தது.




இந்த அரசியல் முர ண்பாட்டிற்கு இன்னமும் உயிர் இருக்கிறது.

அதனால் இந்தியா கூட்டணியின் சமூக நீதி அரசியலில் வடக்கும், தெற்கும் ஒன்றிணைந்து பயணப்படும் சாத்தியங்கள் கணிசமாக உள்ளன. தமிழ்நாட்டு முதல்வர் சென்ற வாரம் வி.பி.சிங் அவர்களின் திருவுருவச் சிலையை சென்னையில் திறந்து வைத்ததும், அதற்கு சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவை அழைத்ததும் குறிப்பிடத் தக்கது. மொழி அடிப்படையில் நாம் தென்னிந்தியாவை 'திராவிடம்' என அழைத்தாலும், பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர், தலித்பகுஜன் அரசியல் என்ற அளவில் மொத்த இந்தியாவையுமே திராவிட பண்பாடாக கருதவும் இடம் இருக்கிறது. அதனால் வடக்கு தெற்கு வேறுபாட்டை ஒற்றைப் பரிமாணத்தில் சாராம்சப்படுத்த தேவையில்லை. இந்துத்துவர்களின் கற்பனை தொலைக்காட்சி விவாதத்தில் பா.ஜ.க. ஆதரவாளர் ஒருவர் வட மாநிலங்களில் பா.ஜ.க. வெல்வதற்குக் காரணம் முகலாயர் ஆட்சியில் இந்துக்களெல்லாம் கொடுமைப் படுத்தப்பட்டதுதான் என்றார்.

இது முற்றிலும் வரலாற்றுத் திரிபு, புனைவு என்பது வரலாற்றைப் படித்தவர்களுக்குத் தெரியும். அக்பரின் அவையில் தோடர்மால், பீர்பால் ஆகியோர் வகித்த பங்கு வெகுமக்களின் பேச்சு வழக்கிலேயே இடம் பெற்றதுதான். அப்படியே இருந்தாலும் கூட, காங்கிரஸ் கட்சி நேருவின் காலத்தில் வென்றபோதும், இந்திரா காந்தி காலத்தில் வென்ற போதும், ஏன் 1984ஆம் ஆண்டு ராஜீவ் காந்திக்கு பேரலையான ஆதரவை அளித்தபோதும் முகலாயர் காலத்தை வட இந்தியாவில் மறந்து போய்விட்டனரா என்ன? அல்லது முலாயம் சிங்கும், அகிலேஷ் யாதவும் உத்திரப் பிரதேசத்தில் வென்ற போது மறந்து போய்விட்டார்களா? தென்னிந்தியாவை முகலாயர்கள் ஆளவில்லை என்றாலும், எத்தனையோ முஸ்லீம் சுல்தான்களும், நவாப்களும் ஆளவில்லையா என்ன? அதற்காக தென்னகத்து மக்களெல்லாம் பாஜகவை ஆதரித்து விடுவார்களா?



திப்பு சுல்தானைப் பற்றி எத்தனையோ பொய்களை புனைந்தார்களே? அதனால் கர்நாடகாவில் வென்றுவிட்டார்களா? இது போன்ற அர்த்தமற்ற காரணங்களை அறிந்தோ, அறியாமலோ பலரும் கூறுகின்றனர்.

முஸ்லீம்களுக்கு எதிரான அடையாளமாக இந்துக்களை கட்டமைப்பது என்பது காலனீய கால கட்டத்தில் பத்தொன்பதாம்நூற்றாண்டில் துவங்கிய நடைமுறை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த இந்து அடையாளவாத தேசியத்தை மறுத்து இந்து - முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தியதால்தான் காந்தியார் கொல்லப்பட்டார். ஆனால் மக்கள் இன்றும் காந்தியாரை மிகுந்த மரியாதையுடன் வணங்குகின்றனர். காந்தியாரின் நினைவை இந்திய மக்களிடமிருந்து அகற்ற முடியாது. இந்தியா கூட்டணியின் சமூக நீதி அரசியல் ஒட்டுமொத்த இந்தியாவையும் திராவிடப் பண்பாட்டின் அடையாளமாக்க வேண்டும். பார்ப்பன - பனியா கருத்தியல் மேலாதிக்கத்தைத் தகர்க்க வேண்டும்.

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக இளைஞரணி செயலாளர் – விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவர் அணி மற்றும் கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி மற்றும் பல் மருத்துவக் கல்லூரி இணைந்து வெண்ணாவல் குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் அண்ணாமலை ரகுபதி தலைமையில் நடைபெற்ற மாபெரும் இலவச பொது மருத்துவம் மற்றும் பல் மருத்துவ முகாமை, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வுகளில் ஆலங்குடி தொகுதி பொறுப்பாளர் கேசவன், ஞான. இளங்கோவன், அரு. வடிவேல், கே.பி.கே.டி. தங்கமணி, கே.எஸ்.ரவி, டாக்டர் சுதர்சன், டாக்டர் சதீஷ், இளையராஜா, டாக்டர் செந்தில்ராஜ், டாக்டர் ராஜப்பிரியன், டாக்டர் கண்ணதாசன், அமைப்பாளர் ஜான் பிரிட்டோ மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அண்ணல் அம்பேத்கரின்67வது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்டத் துணை செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், நகரச் செயலாளர்கள் என்.குணசேகரன், பெரி.பாலா, பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் உட்பட கழக நிர்வாகிகள் உள்ளார்கள்.



சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 67வது நினைவு நாளை முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் டி.கே.மோகன், ஆ.சம்பத் குமார், சாந்தி சீனிவாசன், நகரச் செயலாளர் வி.எஸ்.சாரதிகுமார், எஸ்.தாமோதரன், கே.ஆர்.திருப்பதி, டி.சாமுண்டி, சு.அரசு, தே.பிரபாகரன், எஸ்.ஆர். என்ற ராஜா, ஏ.சி.தேவகுமார், சையத் அபீப்தங்கல், மேகநாதன், கலாராணி, பிரேமா சக்கரவர்த்தி, நூர்முகமது, எஸ்.பழனி, சுந்தரமூர்த்தி, கோதண்டம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கொடிநாள் மலர் வெளியிட்டு - நிதி வாரி வழங்கிட முதல்வர் வேண்டுகோள்!

# 2023 ஆம் ஆண்டுக்கான கொடிநாள் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, டிச.9 – 2023ஆம் ஆண்டுக்கான கொடிநாள் நிதி வழங்கி கொடிநாள் மலரை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடிநாள் நிதி வாரி வழங்கிடுவீர் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:–

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 07ஆம் நாள் நாடு முழுவதும் கொடி நாளாக அனுசரிக்கப்படுகிறது.

இந்த நாளில் போர் மற்றும் போரையொத்த நடவடிக்கையில் நாட்டிற்காக உயிர்தியாகம் செய்த முப்படையினை சேர்ந்த வீரர்கள், ஊனமுற்ற வீரர்கள், முன்னாள் படைவீரர்களின் தியாகங்களை நினைவு கூறவும், அவர்களுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களுக்காக கொடிநாள் நிதி திரட்டப்பட்டு வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் கொடிநாள் நிதி திரட்டப் பட்டதில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் தொடர்ந்து முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. கடந்த ஆண்டு ரூ.53 கோடி நிதி திரட்டப் பட்டது. இவ்வாண்டு, இதுவரை இல்லாத அளவிற்கு ரூ.58 கோடி கொடி நாள் நிதியாக திரட்டப் பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (07.12.2023) காலையில் கொடிநாள் 2023க்கான நன்கொடையினை, சென்னை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்து, கொடிநாள் மலர் வெளியிட்டு, கொடிநாள் நிதி அதிக அளவில் வாரி வழங்கிட தமிழ்நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்களும் சென்னை ஆளுநர் மாளிகையில் நேற்று முன்தினம் காலை கொடிநாள் நன்கொடை வழங்கி, அதிக அளவில் கொடிநாள் நிதி வழங்கிட தமிழ்நாட்டு மக்களை கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

### "மிக்ஜாம் புயல்"

# அனகாபுத்தூர் பகுதியில் நிவாரண உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

அனகாபுத்தூர், டிச. 9 – அனகாபுத்தூர் பகுதியில் 'மிக்ஜாம்' புயலினால் ஏற்பட்ட கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கியது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு: –

மூன்றாவது நாளாக நடைபெற்று வரும் 'மிக்ஜாம்' புயல் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தி, இன்று அனகாபுத்தூர் பகுதியில் மக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்கினேன்.

அரசின் மீட்புப் பணிகளுக்குத் துணைநின்று தன்னார்வலர்கள் பலரும் உதவி வருகிறார்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### நீலகிரி மாவட்டத்தில்

# புதிய தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான இடம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்!

உதகை, டிச. 9 - நீலகிரி மாவட்டம், குன்னூர், எடப்பள்ளி ஊராட்சி பகுதிகளில் புதிய தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ள இடங்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா முன்னிலை வகித்தார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடந்த தொழில்துறை மானிய கோரிக்கையில், நீலகிரி மாவட்டத்தில் டைட்டல் பார்க் அமைக்கப்படும் என அறிவிக்கப் பட்டது. அதனடிப்படையில் நீலகிரி மாவட்டத்தில் புதிய தொழில் நுட்ப பூங்கா கட்டுவதற்கான சாத்திய கூறுகள் உள்ள இடங்கள் ஆய்வு செய்யப்பட்டது.

இதில் குன்னூர் கோத்தகிரி செல்லும் சாலையில் பந்துமை அருகிலுள்ள அரசு நிலம் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கு ஏதுவாக உள்ளதாக அறியப்படுகிறது.

இந்த இடத்தில் நடைமுறை சாத்தியங்கள் கருத்திற்கொண்டு, தேர்வு செய்யப்பட்டால் தொழில்நுட்ப பூங்கா அமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப் படும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், குன்னூர் வட்டாட்சியர் (பொ) சீனிவாசன், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மோகன் குமாரமங்களம் உட்பட அரசுத் துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

### 444 லாரிகள் மூலம் 4227 நடைகள்!

# சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம்!

சென்னை, டிச. 9 - சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 7.12.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகள் முழுவதும் 444 லாரிகள் மூலம் 4227 நடைகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்பட்டுள்ள சென்னை குடிநீர் வாரியம் தகவல் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 07.12.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு 42 நீர் நிரப்பும் நிலையங்களிலிருந்து 444 லாரிகள் மூலம் 4227 நடைகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப் பட்டது.

மேலும், குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் அனைத்து பகுதிகளிலும் சீராக வழங்கப்பட்டது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு லாரிகள் மூலம் நேரடியாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் செயல்படக்கூடிய 74 நிவாரண முகாம்களுக்கு தேவையான குடிநீர் மற்றும் நிவாரண முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு உணவு தயாரிக்கும் கூடங்களுக்குத் தேவையான குடிநீர் சென்னை குடிநீர் வாரியத்தால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் 116 அதிவேக நீர் உறிஞ்சும் இயந்திரங்களைக் (Super Sucker Machines) கொண்டு கழிவு நீரை வெளியேற்றுவதோடு, பிரதான கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்புகளை 476 தூர்வாரும் இயந்திரங்கள் மற்றும் ஜெட்ராடிங் இயந்திரங்களைக் கொண்டு அகற்றப் பட்டு வருகிறது. மழைநீர் தேங்கிய 263 இடங்களில் மோட்டார்களைக் கொண்டு மழைநீர் அகற்றப்பட்டது.

மேலும், 325 கழிவுநீர் உந்து நிலையங்களில் 179 ஜெனரேட்டர்களைக் கொண்டு தொய்வில்லாமல் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் கழிவுநீர் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழைநீர் தேங்கிய பகுதிகளில் உள்ள அனைத்து குடியிருப்பு களுக்கும் இது வரை 45 இலட்சம் குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மழைக்காலங்களில் பொதுமக்கள் குடிநீரைக் காய்ச்சிப் பருகவும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பொருட்டு தினசரி 300 இடங்களில் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப் பட்டு குடிநீரின் தரம் ஆய்வகம் மூலம் பரிசோதிக்கப்பட்டுவரும் நிலையில் தற்போதைய வடகிழக்குப் பருவமழையின் போது நாளொன்றுக்கு 600 இடங்களில் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப் பட்டு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுகிறது.

மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் வாயிலாக லாரிகள் மூலம் குடிநீர் பெற பொதுமக்கள், கட்டணமில்லா தொலைபேசி எண்.1916 மற்றும் 0444567 4567 (20 இணைப்புகள்) ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம். தெரு நடைகள், குடிநீர் வாரியத்தின் குடிநீர்த் தொட்டிகள் மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கு இலவசமாக குடிநீர் வழங்கப்படும்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி - சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில்

# 300 நடமாடும் மருத்துவ வாகனங்கள் மூலம் 37,751 பேருக்கு பரிசோதனை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!



சென்னை, டிச.9 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் 6.12.2023 அன்று 300 நடமாடும் மருத்துவ வாகனங்களை மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தவகையில் சென்னைக்கு மட்டும் 159 மருத்துவ குழுக்கள், திருவள்ளூர் மாவட்டத்திற்கு 51 மருத்துவ குழுக்கள், செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 60 மருத்துவ குழுக்கள், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 30 மருத்துவ குழுக்கள் என்று மொத்தம் 300 மருத்துவ குழுக்கள் அனுப்பப்பட்டிருந்தது.

இம்மருத்துவக்குழுக்களின் மூலம் மொத்தம் 37,751 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டதில் 1055 நபர்களுக்கு காய்ச்சலும், 4106 நபர்களுக்கு சுவாச தொற்றும், 154 பேருக்கு வயிற்றுப் போக்கும், 226 நபர்களுக்கு சிறு காயங்களும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதுதவிர்த்து நிவாரணப் பகுதிகளில் தங்க வைக்கப் பட்டுள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 275 சிறப்பு மருத்துவ முகாம்கள் மற்றும் 172 நகர்ப்புற நல வாழ்வு மையங்களிலும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது.

மேலும் 108 அவசர ஆம்புலன்ஸ் சேவை, 104 மற்றும் 102 அவசர எண்களையும் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதில் 939 அவசர மருத்துவ உதவிகளுக்கான அழைப்புகள் ஏற்கப்பட்டு உடனடியாக அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### புயல் நிவாரணப் பணிக்கு

# தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தினர் ஒருநாள் ஊதியம்!

## சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிவிப்பு!

சென்னை, டிச.9 - மிக்ஜாம் புயல் மீட்பு பணிக்காக தமிழ்நாடு அரசிடம் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் ஒரு நாள் ஊதியத்தினை வழங்குவதாக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட வரலாறு காணாத மழை பொழிவின் காரணமாக மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு மாவட்ட மக்களை இயல்பு நிலைக்கு கொண்டு வர பல முன்னெடுப்புகளை இரவு பகல் பாராமல் எடுத்து வரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும், பேரிடர் மேலாண்மை ஊழியர்களுக்கும் மாநகராட்சி ஊழியர்களுக்கும் முன்கள பணியாளர்களுக்கும் காவல் துறை உள்ளிட்ட அனைத்து துறை ஊழியர்களுக்கும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் மனமார வாழ்த்து கூறி நன்றி பாராட்டுகிறது.

மேலும் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ போர்கால அடிப்படையில் நடவடிக்கைகளை முனைப்போடு எடுத்து வரும் சூழலில் தமிழக அரசோடு கைகோர்க்க அனைத்து அமைப்புகளுக்கும் அழைப்பு விடுத்ததை தொடர்ந்து தமிழ்நாடு அரசுக்கு என்றென்றும் உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட தங்களின் ஒரு நாள் ஊதியத்தை மனமுவந்து வழங்க முன் வந்துள்ளனர்.

பல்லாயிரம் கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தியுள்ள இந்த புயலால் அனைத்தையும் இழந்து பரிதவிக்கும் மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் இது சிறு உதவியாக இருக்கும் என கருதுகிறோம்.

பிறப்பிக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

இது குறித்த எங்களின் முறையான கடிதத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி உள்ளோம். கடந்த காலங்களில் எப்போதெல்லாம் பேரிடர் மற்றும் இயற்கை சீற்றங்கள் நடைபெற்றதோ அப்போதெல்லாம் எங்களின் ஒருநாள் ஊதியத்தினை வழங்கி மக்களோடு களத்தில் நின்றிருக்கிறோம்.

ஏன் கடந்த கொரோனா பேரிடர் காலங்களில் கூட எங்கள் ஒரு நாள் ஊதியத்துடன் எங்கள் பேரியக்கத்தின் சார்பாக ரூபாய் 1,50,30,127 (ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து முப்பதாயிரத்து நூற்று இருபத்தேழு ரூபாய்) வழங்கி இருக்கிறோம் என்பதையும் இது போன்ற பேரிடர் காலங்களில் இன்றும், அன்றும், என்றென்றும் தமிழக மக்கள் நலனுக்காக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் முதலில் முன் வந்து களத்தில் நிற்கும் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொண்டு, தொடர்ந்து தமிழ்நாடு மக்கள் நலன் சார்ந்து எங்கள் அமைப்பு பயணிக்கும் என்றும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் அவர் தெரிவித்து உள்ளார்.

எனவே எங்களின் ஒரு நாள் ஊதியத்தை பிடித்தம் செய்வதற்குரிய தகுந்த செயல்முறைகளை வெளியிட்டு புயலால் பாதிக்கப்பட்ட மக்களை வெகு விரைவில் இயல்பு நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்வதற்கு உதவிடும் வகையில் உரிய ஆணை பிறப்பிக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

இதுகுறித்த எங்களின் முறையான கடிதத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி உள்ளோம். கடந்த காலங்களில் எப்போதெல்லாம் பேரிடர் மற்றும் இயற்கை சீற்றங்கள் நடைபெற்றதோ அப்போதெல்லாம் எங்களின்

ஒருநாள் ஊதியத்தினை வழங்கி மக்களோடு களத்தில் நின்றிருக்கிறோம்.

ஏன் கடந்த கொரோனா பேரிடர் காலங்களில் கூட எங்கள் ஒரு நாள் ஊதியத்துடன் எங்கள் பேரியக்கத்தின் சார்பாக ரூபாய் 1,50,30,127 (ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து முப்பதாயிரத்து நூற்று இருபத்தேழு ரூபாய்) வழங்கி இருக்கிறோம் என்பதையும் இது போன்ற பேரிடர் காலங்களில் இன்றும், அன்றும், என்றென்றும் தமிழக மக்கள் நலனுக்காக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் முதலில் முன் வந்து களத்தில் நிற்கும் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொண்டு, தொடர்ந்து தமிழ்நாடு மக்கள் நலன் சார்ந்து எங்கள் அமைப்பு பயணிக்கும் என்றும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் அவர் தெரிவித்து உள்ளார்.

### மாதவரம் 30வது வட்டத்தில்

# நிவாரண உதவி வழங்கல்!

## டி.சுந்தரம் - திருமலை ஜி.துரைசாமி பங்கேற்பு!

சென்னை, டிச. 9- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30-வது வட்டத்தின் சார்பில் மழை வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வீடு வீடாகச் சென்று வட்டக் கழகச் செயலாளர் டி.சுந்தரம், மாமன்ற உறுப்பினர் திருமலை ஜி. துரைசாமி, எஸ்.என்.ராஜீ, நரேந்திரன், சக்கரபாணி, பரமேஸ்வரி, உமாமகேஸ்வரி, டி.வி.எஸ். கோபி, எம்.சீனிவாசன், பி.எஸ்.என்.எல்.குமார், என்.சுரேஷ், வி.பாஸ்கர், டி.தரணி, நாகராஜ், தேவராஜ், குடிநீர் பால் உணவு ரொட்டி ஆகியவற்றை வழங்கினர்.

பரிமளம் நகர் 1வது தெரு, இரண்டாவது தெரு, திருமலை நகர், வளர்மதி நகர், பச்சையப்பன் காலனி, எட்டியப்பன் நகர், செகரட்டரியட் காலனி, லட்சுமிபுரம் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டூர் அ. இராசசேகரன்
### டிசம்பர் 9 (2012)



மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு செயல்பட்டவர். கோட்டூர் ஒன்றியச் செயலாளராக இருபது ஆண்டுகளும், திருவாரூர் மாவட்டம் உருவாகியபோது முதல் மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும் பின்னர், மாவட்டக் கழகச் செயலாளராகவும், கழக விவசாய அணி இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"இமை கொட்டாமல் இயக்கத்தை வளர்த்த என் இளைய தம்பிகளில் ஒருவர், தங்கமாக விளங்கியவர்" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு

## தேதி மாற்றம்!

## 2023 டிசம்பர் 24 - ஞாயிறு அன்று நடைபெறும்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

"மிக்ஜாம்" புயலால் பெய்த பெருமழை வெள்ளம் காரணமாக, சில மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி, மழை வெள்ள நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதால்,

வருகிற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட **"தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு"** தேதி மாற்றப்பட்டு, வருகிற 24.12.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறும்.

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை-18.**
**நாள் : 08.12.2023**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

---

### வேளாண்காடு வளர்ப்பின் மூலமாக

# சுற்றுச்சூழலை மேம்படுத்த, ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் தொடருமா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 9-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 05 டிசம்பர் 2023 அன்று மக்களவையில், வேளாண்காடு வளர்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைக்கவும் தேவையான முயற்சிகளை ஒன்றிய அரசு எடுத்துள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின், விவசாயத் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமரிடம், கேள்வி எழுப்பினார்.



ஒன்றிய அரசின் விவசாயத் துறைஅமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

பருவநிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களை குறைக்கவும், இயற்கை வளங்களை பாதுகாக்கவும், வேளாண்காடு வளர்ப்பு பெருமளவில் உதவிசெய்வதோடு, சிறு விவசாயிகளின் நலனை பெருக்கவும் வேளாண்காடு வளர்ப்பு முக்கியம் என்பதை ஒன்றிய அரசு உணர்ந்துள்ளது என்றும், இதற்காகவே, தேசிய வேளாண்காடு வளர்ப்புக் கொள்கை 2014 ஆண்டிலேயே விவசாயத் துறை உருவாக்கியுள்ளது என்றும், இதன்மூலம் வேளாண்காடு வளர்ப்பு, கால்நடைப் பெருக்கத்திற்கான முயற்சிகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்றும், இதனால் நிலத்தின் இயற்கை வளம் பாதுகாக்கப் படுவதோடு வேலை வாய்ப்பு, வருமானம், விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றிலும் கணிசமான அளவில் சிறு விவசாயிகள் பலனடைந்து வருகின்றன என்றும், சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் வேளாண்காடு வளர்ப்பு உதவி செய்கிறது என்றும் அமைச்சர், மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், கடந்த நான்கு ஆண்டுகளாக தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் வேளாண்காடு வளர்ப்பில், புதிய நாற்றங்கால்களை உருவாக்கவும், உயிரணு வளர்ப்பு முறை மூலமும் செயல்பட, அரசு நிலங்களுக்கு 100 சதவீத நிதியுதவியும், தனியார் நிலங்களுக்கு 50 சதவித நிதியுதவியும் ஒன்றிய அரசு அளித்து வருகின்றது என்றும், ஒன்றிய அரசின் விவசாயத் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், மக்களவையில் தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.

---

### சென்னை நீர்த் தேக்கங்களிலிருந்து

# திட்டமிட்டு நீரை வெளியேற்றியதால் பெருவெள்ளம் தவிர்ப்பு!

## நீர்வளத்துறைக்கு 'தி இந்து' நாளேடு பாராட்டு!

**சென்னை, டிச. 9-**

**மண்டல வானிலை ஆய்வு மையத்தின் சரியான புயல் எச்சரிக்கையை அடிப்படையாகக் கொண்டு, சென்னை நீர்த்தேக்கங்களில் உபரி நீரை திட்டமிட்டு வெளியேற்றியதால், சென்னையில் ஓடும் ஆறுகளில் பெருவெள்ளம் தவிர்க்கப்பட்டதாக 'தி இந்து' நாளேடு தமிழ்நாடு நீர்வளத் துறைக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.**

மிக்ஜாம் புயலையொட்டி சென்னையில் வரலாறு காணாத மழை பெய்துள்ள நிலையில் சென்னை ஆறுகளில் பெருவெள்ளம் ஏற்படாமல் தவிர்க்கப் பட்டது.

சென்னையில் உள்ள செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம் ஏரிகளில் கடும் மழை காரணமாக நீர் அதிகரித்த போதும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாதிருக்க மெல்லமெல்ல நீர் வெளியேற்றத்தை குறைத்தது தமிழ்நாடு நீர்வளத் துறை.

டிசம்பர் 4-ஆம் தேதி செம்பரம்பாக்கத்தில் வினாடிக்கு 8 ஆயிரம் கன அடி வெளியேறிய நிலையில், அதை 2500 கன அடியாக குறைத்து வெளியேற்றியதை 'தி இந்து' நாளேடு சுட்டிக்காட்டியுள்ளது.

**அமைச்சர் துரைமுருகன் நேரில் ஆய்வு!**

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அதிகாரிகளுடன் சென்று நீர்த்தேக்கங்களை புதனன்று ஆய்வு செய்தார். செம்பரம்பாக்கம் ஏரி அதன் முழு கொள்ளளவான 3645 மில்லியன் கன அடிக்குப் பதிலாக 3459 மில்லியன் கன அடி தண்ணீர் தற்போதைக்கு இருப்பு உள்ளது.

இந்த பருவ காலத்தில் நீர்த்தேக்க பராமரிப்பு நிலையம் ஏற்கனவே கையாண்ட நிலைகளிலிருந்து முற்றிலும் மாற்றிக்கொண்டதாக நீர்வளத்துறை அதிகாரிகள் குறிப் பிட்டனர்.

கடந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்ட அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, நீர் வெளியேற்றும் முறையை தற்போது மேற்கொண்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்ததை ' தி இந்து' மேற்கோள்காட்டியுள்ளது.

இந்த ஆண்டு கடும் மழை பெய்யக்கூடும் என்பதை எதிர்பார்த்து, குறைந்த அளவிலான நீரையே நீர்நிலை களில் இருப்பு வைக்கப்பட்டது. குடிதண்ணீர் வழங்கும் ஏரிகளில் குறைந்தபட்சம் 3 அடி அளவிற்கு நீர் நிலைகளின் கொள்ளளவுகளை குறைத்தே பராமரித்து வந்தது. மழைநீர் வந்தால் சேமிக்க வசதியாக இவ்வாறு முடிவெடுக்கப்பட்டது.

**பாதிப்பு ஏற்படாமல் நடவடிக்கை!**

மழை பெய்யத் துவங்கும் முன்னரே, செம்பரம்பாக்கம் ஏரிக்கு வரும் தண்ணீரைக் காட்டிலும் கூடுதல் தண்ணீரை வெளியேற்றினோம். கடும் மழை காலத்தில் மட்டும் அதிக அளவு தண்ணீர் ஏரிக்கு வரும்போது வெளியேற்றப்படும் நீரை குறைத்து, நீரின் சேமிப்பை அதிகரித்தோம். 10 மணி நேரம் தொடர்ந்து மழை பெய்தபோதும் கூட ஆதனூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த நீரால் அடையாறு பெருக்கெடுத்து அக்கம்பக்கம் உள்ள பகுதிகளில் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்பட்டது என்று நீர்வளத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



THE HINDU

Chennai

**Planned release from reservoirs helped avert flash floods in city**

The Water Resources Department had been experimenting with releasing a marginal amount of water from the city reservoirs ahead of the peak monsoon for the past two years

K. Lakshmi
CHENNAI

Planned discharge of surplus water from the city's reservoirs based on the Regional Meteorological Department's accurate cyclone forecasts helped avert flash floods in the major rivers during the historic rain caused by cyclone Michaung.

The Water Resources Department started to gradually reduce water release from the city reservoirs, including Chembarambakkam, Poondi and Red Hills, on Wednesday. The water discharge that was as high as 8,000 cubic feet per second from Chembarambakkam reservoir on December 4 was reduced to 2,500 cusecs as rainfall has stopped over the region.

Water Resources Minister Durai Murugan inspected the reservoirs on Wednesday along with government officials. The Chembarambakkam reservoir's storage is now being maintained at 3,459 million cubic feet (mcft) against 3,645 mcft.

Officials of the WRD said the department had shifted from its conservative approach in reservoir management this monsoon. The department had been experimenting on releasing a marginal amount of water ahead of the peak rain spell for the past two years now.

This year, it may be recalled that a minimum quantity of storage was depleted from the reservoirs ahead of the unprecedented rains. A gap of at least three feet was maintained at each reservoir feeding drinking water to the city to create more storage space.

"For instance, we had let out additional water from Chembarambakkam more than the inflow before the rain spell. During peak inflow, we were able to reduce discharge and store more water in Chembarambakkam with additional storage space. Adyar river carried only peak flow from upstream stretches like Adhanur during 10 hours on the day of torrential downpour. Flash floods in Adyar river inundating neighbouring areas were averted," said an official.

Such steps helped in allowing fluvial floods to drain into the river. Adyar river now carried a flow of about 23,000 cusecs and can carry up to a maximum of 45,000 cusecs without spillover.

Similar measures were carried out in Poondi reservoir as well. The storage in the reservoirs was brought down to 75% during the days of downpour and now again built to nearly 94% on Wednesday.

The water discharge was as high as 8,000 cubic feet per second from the Chembarambakkam reservoir on December 4.

இதுபோன்ற நடவடிக்கைகள் ஆறுகளில் வெள்ளம் ஏற்படுவதை தவிர்த்தது. எந்தவித பிரச்சினையு மின்றி அடையாறு தற்போது 23 ஆயிரம் கன அடி நீரை கையாண்டு வருகிறது. அதிகபட்சம் 45 ஆயிரம் கன அடி நீரையும் அது கையாளக்கூடும் என்றும் அவர் தெரிவித்ததாகவும்

பூண்டி நீர்த்தேக்கத்தி லும் அதே முறையை கையாள்வதன் காரணமாக, மழைக் காலங்களில் அதன் கொள்ளளவு 75 சதவிகிதமாக குறைந்து, தற்போது அதிக மழையால் 94 சதவிகிதம் இருப்பு இருக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டோம் எனவும் அந்த அதிகாரி தெரிவித்ததாகவும் 'தி இந்து' நாளேட்டில் செய்தி வெளியாகி உள்ளது.

---

### தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று

# முதல்கட்டமாக ரூ.450 கோடி நிவாரண நிதி!

## வெள்ளத் தடுப்புக்கு ரூ.500 கோடி - ஒன்றிய அரசு ஒதுக்கியது!

சென்னை, டிச. 9 -

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று முதல்கட்டமாக நிவாரண பணிகளுக்கு 450 கோடி ரூபாயை ஒன்றிய அரசு விடுவித்துள்ளது. மேலும் நகர்ப்புற வெள்ள மேலாண்மை திட்டத்திற்கு 500 கோடி ரூபாய் வழங்க பிரதமர் ஒப்புதல் அளித்துள்ளார்.

மிக்ஜாம் புயலால் ஏற்பட்டுள்ள சேதங்களை சரிசெய்திட இடைக்கால நிவாரணமாக ஐந்தாயிரத்து 60 கோடி ரூபாய் வழங்கிட வேண்டும் என பிரதமருக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார்.

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று முதல்கட்டமாக, 450 கோடி ரூபாய் ஒன்றிய அரசு விடுவித்துள்ளது. மாநில பேரிடர் தடுப்புப் படைக்கு ஒன்றிய அரசின் பங்களிப்பாக வழக்கமாக வழங்கப்படும் தொகையின் முதல் தவணையாக 450 கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிலையில், புயல் பாதிப்பை கருத்தில்கொண்டு, இரண்டாவது தவணைத்தொகை 450 கோடி ரூபாயை முன்கூட்டியே ஒன்றிய அரசு விடுவித்துள்ளது. மேலும், சென்னையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நகர்ப்புற வெள்ள மேலாண்மை திட்டத்திற்கு 500 கோடிரூபாய் வழங்க பிரதமர் ஒப்புதல் அளித்துள்ளார்.

---

### ஃபார்முலா 4 கார் பந்தயம்

# காலவரையறையின்றி ஒத்திவைப்பு!

சென்னை, டிச. 9-

ஃபார்முலா 4 கார் பந்தயம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப் படுகிறது.

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

மிக்ஜாம் புயல் பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளதன் விளைவாக சென்னையில் நடைபெற இருந்த ஃபார்முலா 4 கார் பந்தயம் கால வரையறையின்றி எந்தத் தேதியும் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

---

### நீலகிரி மாவட்டத்தில்

# ரூ.1.81 கோடி மதிப்பில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

நீலகிரி, டிச.9-

நீலகிரி மாவட்டத்தில், கீழ்குந்தா மற்றும் பிக்கட்டி பேரூராட்சிகளில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், ரூ.86.61 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம், பிக்கட்டி பேரூராட்சி தக்கர் பாபா நகரில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலை மேம்பாடு பணியினையும், தலையட்டியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.22.61 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு சுவருடன் கூடிய சிமெண்ட் சாலை பணியினையும், 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் நடுஹட்டியில் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியினையும் என மொத்தம் ரூ.86.61 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட வளர்ச்சித்திட்டப் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நேற்று முன்தினம் (07.12.2023) திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா முன்னிலை வகித்தார்.

மேலும், பிக்கட்டி பேரூராட்சிக்குட்பட்ட தக்கர் பாபா நகர், பிக்கட்டி, எடக்காடு மற்றும் முக்கிமலை பகுதிகளில் 15-வது நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் ரூ.8.17 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் குடிநீர் குழாய் அமைக்கும் பணிகளையும், அயோத்தி தாஸ் பண்டிதர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை மற்றும் வடிகால் அமைக்கும் பணியினையும் சுற்றுலாத்துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்குந்தா பேரூராட்சியில், 15வது நிதிக்குழு டைட் மானியத் திட்டத்தின் கீழ், ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் காந்திபுரம் பகுதியில் மறுகட்டமைப்பு செய்யப்பட்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியினையும்,

15-வது நிதிக்குழு அன்டைட் மானியத்திட்டத்தின் கீழ், ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் தடுப்புச்சுவருடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலைப்பணியினையும்,

ஒணிகண்டி பகுதியில் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் கழிவுநீர் கால்வாயுடன் கூடிய நடைபாதை கட்டுமான பணியினையும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.1.17 கோடி மதிப்பீட்டில் காந்தி சிலை முதல் அயூர் சாலை வரையிலும், மஞ்சூர் அட்டி முதல் புயூரியல் கிரௌண்ட் வரையிலும், ஒணிகண்டி மந்துவிலும் அமைக்கப்பட்டு வரும் தடுப்புச்சுவருடன் கூடிய கான்கிரீட் சிமெண்ட் சாலை கட்டுமான பணிகளை என மொத்தம் ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து, விரைவில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு துறைச் சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் க.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார். மேலும், முதலமைச்சர் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை முன்னுரிமை அளித்து மேற்கொள்ள அறிவுறுத்தியதை தொடர்ந்து, பிக்கட்டி தேர்வுநிலை பேரூராட்சியில் 2021-2022ம் ஆண்டிற்கு ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் 57 பணிகளும், 2022-2023-ஆம் ஆண்டிற்கு ரூ.87.61 இலட்சம் மதிப்பீட்டில் 10 பணிகளும், 2023-2024-ஆம் ஆண்டிற்கு ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் 4 பணிகளும் என மொத்தம் ரூ.4.62 கோடி மதிப்பீட்டில் 71 பணிகள் நடைபெற்றுள்ளது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தும் மக்கள் நலத்திட்டங்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வில், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) இப்ராஹிம்ஷா, செயல் அலுவலர்கள் திருமதி.மோகனவள்ளி (பிக்கட்டி), ரவிக்குமார் (கீழ்குந்தா), பேரூராட்சி தலைவர்கள் திருமதி.சத்யவாணி (கீழ்குந்தா), திருமதி. சந்திரலேகா (பிக்கட்டி), துணைத்தலைவர்கள் ஜெயகுமரன் (பிக்கட்டி), நேரு (கீழ்குந்தா), உதவி செயற்பொறியாளர் ராஜா, கீழ்குந்தா பேரூராட்சி உதவிப் பொறியாளர் மோகன்ராஜ், குந்தா வட்டாட்சியர் திருமதி.கலைச்செல்வி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிகள் உட்பட அரசுத் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

### வந்தே பாரத் ரயில்கள்

# ஜோலார்பேட்டையில் நின்று செல்ல ஏற்பாடு செய்வீர்!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 9-

வந்தே பாரத் ரயில்கள் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் நின்று செல்ல ரயில்வே துறை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மக்களவையில் திருப்பத்தூர் உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை வேண்டுகோள் விடுத்தார்.



மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை பேசியதாவது,

திருவண்ணாமலை தொகுதிக்கு உட்பட்ட திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ரயில்வே ஸ்டேஷன் தமிழகத்தில் முக்கிய ரயில்வே ஸ்டேஷன்களில் ஒன்றாக விளங்கி வருகிறது.

ஜோலார்பேட்டை ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நாளைக்கு சுமார் 150க்கும் அதிகமான பயணிகள் ரயில்கள் நின்று செல்கின்றன. ஆனால் வந்தே பாரத் ரயில் உள்ளிட்ட ஒரு சில ரயில்கள் மட்டும் இங்கு நிற்ப தில்லை.

மேலும், ஜோலார்பேட்டை அருகே சுற்றுலாத் தலமான ஏலகிரி மலைக்கு வெளி மாநிலங்களில் இருந்து அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இந்நிலையில், சென்னையில் இருந்து கோயம்புத்தூர் வரை செல்லும் வந்தேபாரத் அதிவிரைவு ரயில் மற்றும் சென்னை வரையில் இருந்து மைசூர் செல்லும் வந்தே பாரத் ரயில்கள் ஜோலார்பேட்டையில் நின்று செல்ல வேண்டும் என பல்வேறு தரப்பு மக்களும், ரயில் பயணிகளும் கோரிக்கை விடுத்து வரு கின்றனர்.

எனவே, ரயில்வே துறை அமைச்சகம் வந்தேபாரத் ரயில் ஜோலார்பேட்டையில் நின்று செல்ல வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3 அன்று

# சிறந்த இதழியலாளருக்கு 'கலைஞர் எழுதுகோல் விருது!'

## கூடுதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன! அரசு அறிவிப்பு!

சென்னை, டிச. 9-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 அன்று - அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், ஒரு சிறந்த இதழியலாளருக்கு 'கலைஞர் எழுதுகோல் விருது' எனும் விருது வழங்கிடும் திட்டம் அறிவிக்கப் பட்டது.

இந்நிலையில் இவ்விருதுக்கு கூடுதலாக விண்ணப்பங்களை வரவேற்று செய்தி மக்கள் தொடர்புத் துறை அறிவிப்பு வெளியிட்டது.

இது தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு:-

ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் நாளன்று, ஒரு சிறந்த இதழியலாளருக்கு "கலைஞர் எழுதுகோல் விருது" வழங்கி கௌரவிக்க ஆணை வெளியிடப்பட்டு, 2022 ஆம் ஆண்டிற்கான "கலைஞர் எழுதுகோல் விருது" வழங்கவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பெண்மையைப் போற்றுகின்ற வகையில் சிறப்பின மாக இவ்வாண்டு மட்டும் ஒரு பெண் இதழியலாளருக்கு கூடுதலாக ஒரு "கலைஞர் எழுதுகோல் விருது" வழங்கி கௌரவிக்க அரசு முடிவு செய்து நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டு தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. இந்நிலையில், மேற்காணும் விருதுகளுக்கான கூடுதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. கலைஞர் எழுதுகோல் விருதானது, ரூபாய் ஐந்து இலட்சம் பரிசுத் தொகையுடன், பாராட்டுச் சான்றிதழும் அடங்கும். விருதிற்கான தகுதிகள் பின்வருமாறு:

- விண்ணப்பதாரர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
- தமிழ் இதழியல் துறையில் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளாக தொடர்ந்து பணிபுரிந்திருக்க வேண்டும்.
- பத்திரிகைப் பணியை முழுநேரப் பணியாகக் கொண்டிருக்க வேண்டும்
- இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும், பெண்களின் முன்னேற்றத் திற்காகவும், பங்காற்றியிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரரின் எழுத்துகள் பொதுமக்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் .
- விண்ணப்பதாரர் நேரடியாகவோ, மற்றொருவர் பரிந்துரையின் அடிப்படையிலோ பணிபுரியும் நிறுவனத்தின் பரிந்துரையின் பேரிலோ விண்ணப்பங்களை அனுப்பலாம் .
- விண்ணப்பதாரர்களில் ஒருவரே விருதாளராக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்.
- குழுவின் முடிவே இறுதியானது.

3."கலைஞர் எழுதுகோல் விருது 2022" மற்றும் பெண்மையைப் போற்றுகின்ற வகையில் சிறப்பினமாக கூடுதலாக ஒரு பெண் இதழியலாளருக்கு "கலைஞர் எழுதுகோல் விருது" ஆகியவற்றிற்கான தகுதியான விண்ணப்பங்கள், விரிவான தன் விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச்செயலகம், சென்னை 600 009 என்ற முகவரிக்கு 15.12.2023 க்குள்ளாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அச்செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# உடன்பிறப்பே... 35

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த இளமுருகு பொற்செல்வி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## இளமுருகு பொற்செல்வி

## தமிழ்த் தொண்டும் கழகக் களமும்

*1957*-ஆம் ஆண்டு கழகம் முதன்முதலில் தேர்தலைச் சந்திக்கிறது. நிலவுடைமை ஆதிக்கம், கூலித்தொழிலாளிகள் நிறைந்த குளித்தலை தொகுதியில் நிற்கிறார் 33 வயதேயான இளைஞர் கலைஞர்.

அதற்கு முன் தேர்தலை எதிர்கொண்ட அனுபவம் இல்லை, தேர்தல் பிரச்சாரத்துக்குச் செலவு செய்யும் வசதிகள் இல்லை, கிடைத்த வசதிகளை வாய்ப்புகளைக் கொண்டு தேர்தலை எதிர்கொள்வது என முடிவெடுத்து, களம் காண்கிறார்.

அவர் யாரை எதிர்த்து நின்றாரெனில், பெரும் நிலச்சுவான்தார் கே.ஏ.தர்மலிங்கம். காங்கிரஸ் கட்சி சார்பில் நின்ற அவர், கட்சியில் முக்கியப் பிரமுகர், பெரும் செல்வந்தர். ஆனால், கழகத்தின் பிரச்சார வியூகம், கலைஞரின் விடாமுயற்சி, கழகத்தவர்களின் அபாரமான ஒத்துழைப்பு இவற்றின் மூலம் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தமிழ்நாடு ஆட்சிமன்றத்தில் அடியெடுத்து வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அதற்கு முன் குளித்தலைக்கும் அவருக்கும் ஒரு சம்பந்தம் இருந்தது. கழகத்தின் வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கு முன்பே, குளித்தலைக்குச் சென்று தீயாக வேலை செய்கிறார். அவரால் மக்கள் மன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, சட்டமன்றத்தின் மூலம் தீர்வு காணப்பட்ட **'நங்கவரம் போராட்டம்'** என்கிற வரலாறு அதைச் சொல்லும். அந்த நாட்களில் கலைஞரின் உடன்நின்ற உடன்பிறப்பு மீ.சு. இளமுருகு. விரிவாகச் சொல்லவேண்டுமெனில் **'இளமுருகு பொற்செல்வி'** என அவரின் இணையர் பெயரையும் சேர்த்தே சொல்லவேண்டும். அப்படித்தான் அவர் அடையாளம் கொண்டுள்ளார்.

அந்த நாட்களில், கலைஞருக்கு பக்கபலமாக மட்டுமல்ல, குளித்தலைத் தொகுதியில் கழகத்தின் தேர்தல் பணிமனையாகச் செயல்பட்டது இளமுருகு அவர்களின் இல்லம்தான் என முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சரான பின்னரும் தனது நினைவுகளைப் பதிவு செய்துள்ளார்.

'தமிழ்ச்சங்கம்' என்றும், 'மொழிப்போர்த் தியாகி' என்றும் தமிழ் அறிஞர்களில் ஒருவர் என்றும், இலக்கிய இலக்கணங்களில் ஊறித் திளைத்த பெரியவர் என்றும் கருதப்பட்டு, சுயமரியாதைச் சுடரொளியாகவும், பகுத்தறிவுச் செம்மலாகவும், திராவிட இயக்கத்தின் வழித் தோன்றலாகவும் விளங்கியவர் இளமுருகு பொற்செல்வி" என இவரின் புகழைப் போற்றியது, 2006-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கழக இளைஞர் அணியின் வெள்ளிவிழா மலர்.

### குளித்தலையில் ஆட்சிமொழி மாநாடு


*1917*-ஆம் ஆண்டு நெல்லையில், தந்தை சுப்பிரமணியனாருக்கும் தாய் ஈஸ்வரவடிவு அம்மையாருக்கும் பிறந்தவர் இளமுருகு. தனது இளம்வயதிலேயே திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, களச் செயல்வீரராகச் செயல்படத் தொடங்கினார். 1937-38 ஆம் ஆண்டுகளில் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பங்கேற்ற முதல் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் இளமுருகு பொற்செல்வியும் பங்கேற்று மொழிப்போர் வீரரானார்.

தமிழ்ப்பற்றும் மொழிப்புலமையும் கொண்ட இளமுருகு தமிழிலக்கிய, இலக்கணங்களில் புலமை கொண்டவராக இருந்தார். கழக ஏடுகளான **'திராவிடன்'**, **'போர்வாள்'** உள்ளிட்ட பல இதழ்களில் கட்டுரைகள் எழுதியுள்ளார். தவிர, **'தமிழ்ச்சுடர்'**, **'மக்களாட்சி'**, **'அஞ்சுகம்'** இதழ்களை ஆசிரியராக இருந்து நடத்தி தமிழ்ப்பணி செய்தவர். 1957-ஆம் ஆண்டில் குளித்தலையில் தமிழ் ஆட்சிமொழி மாநாட்டினை நடத்தி கவனம் பெற வைத்தவர் இளமுருகு.

### கலைஞர் வரலாற்றை எழுதியவர்

இவர் கொள்கைக் கூட்டங்களில் தீவிரமாக இருந்த நாட்களில், ஆசிரியையாகப் பணியாற்றி வந்த பொற்செல்வியைக் காதலித்து சுயமரியாதை மணம் முடித்தார். பொற்செல்வி அவர்களும் திராவிடச் சிந்தனை, திராவிட முன்னேற்றக் கழகச் செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் என்பது தனிச் சிறப்பாகப் பேசப்பட வேண்டிய ஒன்று. இளமுருகு தனது பெயருக்குப் பின்னால் துணைவியாரின் பெயரைச் சேர்த்தது போல், பொற்செல்வியும் தனது பெயருக்குப் பின்னால் கணவரின் பெயருடன் அறியப்படலானவர். கழகத்தின் மகளிர் அணி மாநிலச் செயலாளராகத் திறம்படச் செயலாற்றியவர் பொற்செல்வி அவர்கள். இப்படித் தனது குடும்பத்தையும் கழகப் பணிகளில் கரைத்தவர் இளமுருகு.

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் அண்ணாவின் வழியைப் பின்பற்றி, கழகத் தொண்டராகத் தன்னை இணைத்துக் கொண்டு செயல்படலானார். தொடக்க கால உறுப்பினரானவர் இளமுருகு. கலைஞருடன் நெருக்கமான நட்பு கொண்டவர், 1951-ஆம் ஆண்டிலேயே 'கருணாநிதி யார்?' என கலைஞரின் வாழ்க்கை வரலாற்றினை எழுதியவர் என்றால், அந்த நட்பினைப் புரிந்துகொள்ளலாம். **'அயராதத் தொண்டன் அஞ்சுகச் செல்வன்'** என கலைஞரைக் கொண்டாடும் மற்றொரு நூலையும் இளமுருகு எழுதியுள்ளார்.


ஓவியம் : ரவி பேலட்

**இந்தித் திணிப்புக்கு எதிரான சட்ட நகல் கொளுத்தும் போராட்டத்தில் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்று மதுரையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.**

### குளித்தலையில் கழகம் வளர்த்தவர்

*1953*-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டு வரலாற்றில் அழிக்கமுடியா அடையாளமாக உள்ள 'கல்லக்குடி ரயில் மறியல்' போராட்டத்தில் கலைஞருடன் கைதானவர்களில் இளமுருகும் இருந்தார். இந்தித் திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு போராட்டம் என கழகம் அறிவிக்கும் அத்தனை போராட்டங்களிலும் முன்னின்று களம் காணும் கழகக் காளையாகத் திகழ்ந்தவர். குளித்தலையில் கழகத்தின் கிளையாக, கழகக் கொடி தாங்கிய மரமாகக் கொள்கையை விதைத்த தனிநபராகத் திகழ்ந்தவர் இளமுருகு.

*1957*-ஆம் ஆண்டு கழகத்தின் வெற்றிக்காக, கலைஞரின் வெற்றிக்காக தனது இல்லத்தையே பணிமனையாக மாற்றியவர். 1959-ஆம் ஆண்டில் திருச்சி ரயில் நிலைய இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டத்தில், கலைஞர் தலைமையில் கலந்துகொண்டு கழகக் கடமையாற்றியவர். இந்தித் திணிப்புக்கு எதிரான சட்ட நகல் கொளுத்தும் போராட்டத்தில் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்று மதுரையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

### கழகத்தின் அறிவுச் சுரங்கம்!

போராட்டம், சிறைவாழ்க்கை இவற்றுக்கிடையே இவரது தமிழ்ப் புலமை, எழுத்து ஆகியவற்றில் தனது இயக்கத்தை நிறுத்திக் கொள்ளவில்லை. ஒவ்வொரு ஆண்டு கலைஞர் பிறந்த நாளின்போதும் கலைஞரைப் போற்றும் சிறப்பு மலரைத் தனது சொந்த செலவிலேயே வெளியிட்டுக் கொண்டாடும் பண்பு கொண்டவராக இளமுருகு அவர்களைப் பார்க்க முடிகிறது.

இவரது இடையறாத தமிழ்ப் பணிகளில் குறிப்பிடத்தக்க அடையாளம் எனில், கா.சு.பிள்ளையின் நினைவைப் போற்றுவதில் தமிழ்நாட்டிலே இளமுருகு அவர்களுக்கு ஈடானவர் யாருமில்லை. அவர் பெயரால் நூலகம், படிப்பகம், நடத்தி வந்தார். ஆண்டுதோறும் கா.சு.பிள்ளை நினைவு இலக்கிய விழாவுக்குத் தவறாமல் சென்று, உரை நிகழ்த்தி இருக்கிறார் கலைஞர். இளமுருகு தமது வீட்டு நூலகத்தில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைச் சேகரித்த அறிவுச் சுரங்கமாகக் கழகத்தினருக்குத் திகழ்ந்தார்.

கழகம், கழகப் பணி, தமிழ்ப் பணி எனச் சுற்றிச் சுழன்ற இளமுருகு அவர்களைப் போற்றும் வகையில் 1991-ஆம் ஆண்டு கழகத்தின் முப்பெரும் விழாவில், 'அண்ணா விருதை' தனது கரங்களால் வழங்கி மகிழ்ந்தார் அவரது தம்பி முத்தமிழறிஞர் கலைஞர்.

வயது மூப்பின் காரணமாக, தீவிர அரசியல் பணிகளில் இருந்து ஒதுங்கி, இளையோருக்கு வழிவிட்ட இளமுருகு அவர்கள், 2000-ஆம் ஆண்டில் தனது 83-வது அகவையில் இயற்கை எய்தினார். அவர் மறைவுக்குப் பின், அவர் சேகரித்த அரிய நூல்கள் அனைத்தும் அண்ணா அறிவாலயத்தில் உள்ள பேராசிரியர் ஆய்வு நூலகத்துக்கு வழங்கப்பட்டன.

சுயமரியாதைத் தொண்டு, தமிழிலக்கியப் பணி, கழகக் களம் எனத் தமது குடும்பத்தையும் கொள்கைக் களமாக மாற்றிய இளமுருகு பொற்செல்வி, கலைஞரின் உற்றநண்பராக, உடன்பிறப்பாக என்றும் கழக வரலாற்றில் நிலைத்து நிற்பார்.

...துடிக்கும்

## மாணவர்களிடமிருந்து தொடங்கும் மாற்றம்..!

பிஹார் மாநிலத்தின் சாதி ரீதியான கணக்கெடுப்புக்குப் பிறகு, நாட்டின் பெரும்பாலான இடங்களில் அது போன்ற கணக்கெடுப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஹரியானா மாநிலத்தில் உள்ள அசோகா பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு முன்னெடுப்பை மேற்கொண்டிருக்கிறார்கள். அங்கு பயிலும் பல்வேறு சிறுபான்மை, விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் 'சமூக நீதிக் குழுமம்' என்ற ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் பல்கலைக்கழக வளாகத்தில் அனைவருக்கும் சமத்துவ வாய்ப்புகளை உறுதிசெய்ய முயன்று வருகின்றனர்.

சமீபத்தில் இந்தக் குழு, பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு எழுதிய கடிதத்தில் மாணவர்களுக்கான சம வாய்ப்புகளை உருவாக்க பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே சாதி ரீதியான கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. மாணவர்களின் இந்த முயற்சிக்கு அந்தப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர்கள் அமைப்பும், சில ஆசிரியர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டால், அந்தத் தீ இதர கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களிடையே பரவும். அது நாட்டின் ஆட்சியாளர்களை அசைத்துப் பார்க்கலாம். மாற்றத்துக்கு விதையாகலாம்.

## :ப்ளாஷ்பேக்



### பெரியார் ஜோதி!

1993-ஆம் ஆண்டு கழகத்தில் பிளவு ஏற்பட்டு, தலைவர் கலைஞரை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் எழுச்சி உருவாகி இருந்தது. பல்வேறு பகுதிகளிலிருந்து கிளம்பிய உடன்பிறப்புகள் தஞ்சாவூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்கத் திரண்டு வந்தனர். தஞ்சையில் நடந்த 'பொதுக்குழு விளக்கப் பொதுக்கூட்டத்தில்' திருவோணம் ஒன்றிய இளைஞர் அணியின் சார்பில், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நானும் சகதோழர்களும் சுமார் 40 கி.மீ தூரத்துக்கு தந்தை பெரியார் நினைவு ஜோதியை ஏந்தி வந்து தலைவரிடம் ஒப்படைத்தோம். ஆற்காட்டார் அவர்களும் உடனிருந்தார்.


அண்ணாதுரை

**-எம்.வி.அண்ணாதுரை,**
**ஒன்றிய இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், திருவோணம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணா நகரில் கலைஞர்!

**1980-ஆம் ஆண்டு தேர்தலுக்கான 'கழகத்தின் சிறப்பு மாநாடு' சென்னை வடபழனியில் நடைபெற்றது. முதற்கட்ட வேட்பாளர் பட்டியலில், கலைஞர் பெயர் அறிவிக்கப்படவில்லை. கூட்டத்தில் வேட்பாளர்களின் பெயரை அறிவிக்கையில், அண்ணா நகர் வேட்பாளர் கலைஞர் என அறிவிக்கப்படும் என தொண்டர்கள் எதிர்பார்த்து குரல் எழுப்பினர். கூட்டத்துக்குப் பின்னர் பேராசிரியர் மற்றும் கழக முன்னணியினர் வலியுறுத்தியதால், இரண்டாவது வேட்பாளர் பட்டியலில் கலைஞர் பெயர் இடம்பெற்றது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 323




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131